THE "V A K I L"—TAMIL LAW MONTHLY FOR THE PUBLIC

"வக்கீல்"

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 OCT 1949
MADRAS

168
4-49

இந்த இதழில்

பாங்குச் சட்டம்

ஈடு வைத்துக்கொண்டு
கடன் கொடுப்பவர் சட்டம்

ரயில்வே மூலம் அனுப்பும்
சாமான்கள் குறைந்தாலும்
காணாமற்போனாலும்

பத்திரங்கள்-ஸ்டாம்பு
ரிஜிஸ்டர் கட்டணம் உள்பட

ஜின் கண்ட்ரோல் உத்திரவு

ஷாப் சட்ட அறிக்கைகள்

மற்ற சர்க்கார் அறிக்கைகள்

கேள்வியும்-பதிலும்

விபரங்கள்
உள்ளே பார்க்கவும்

பொது மக்களுக்குத் தேவையான
புதிய சட்டங்களையும் கண்ட்ரோல் முதலிய
விதிகளையும் உடனுக்குடன்
விமர்சனங்களுடன்
விளக்கும்

தமிழ் மாதப் பத்திரிகை

அக்டோபர் 1949

1-7

தபால் பெட்டி நெ. 26. கும்பகோணம்.

தனிப்பிரதி அணா 4
வருட சந்தா ரூ 3

உயர்ந்த ரக உற்பத்திகளுக்கு உகந்த இடம்

வந்து பாருங்கள்

ஸ்டார் ஆப் இந்தியா
பென்சில்களுக்கு
★
மெட்ராஸ்
பென்சில் பாக்டரி

ஸ்டேஷனரி
சாமான்களுக்கு
★
வி. பெருமாள் செட்டி
அண்டு சன்ஸ்

சிறந்த லித்தோ
அச்சு வேலைகளுக்கு
★
ஹேரா & கோ

5, ஸ்டிரிங்கர்தெரு, :: மதராஸ் -1.

OFFICE OF THE ... OF BOOKS
2 OCT 1949

"வக்கீல்"

பொதுமக்களுக்கான உயர்தர
மாத சட்ட வெளியீடு.

ஆசிரியர் கமிட்டி

ஸ்ரீ T. சம்பத், B. A., B. L.,
,, G. நாகராஜபத்தர், B. A., B. L.,
,, V. தியாகராஜன், B. A., B. L.,
,, A. பார்த்தசாரதி நாயுடு, B. A., B. L.,
,, S. சாம்பசிவய்யர், B. A., B. L.,
,, T. S. வெங்கடருமன், B. A., B. L.,
,, R. கோபாலசாமி, B. A., B. L.,
,, R. கிருஷ்ணமூர்த்தி, B. A., B. L.,
,, V. S. விஜயராகவாச்சாரி, B. A., B. L.,

"வக்கீல்"

(சந்தா விபரம்)

வருட சந்தா	... ... ரூ.	3—0—0
தனிப் பிரதி (வெளிவரும் மாதத்தில்)	...	0—4—0
முந்திய மாதப் பிரதி	...	0—6—0
வெளிநாடு வருட சந்தா	...	6—0—0

"வக்கீல்" காரியாலயம்
தபால்பெட்டி நெ. 26 :: கும்பகோணம்

"வக்கீல்"

பொது மக்களுக்கான சட்ட
விஷயங்களை விளக்கும் மாதப் பத்திரிகை

மலர் 1 அக்டோபர் '49 இதழ் 7

பொருள் அடக்கம்

தனி நபரின் சொத்துரிமையும் சட்ட சபைகளும் 3
பாங்குச் சட்டம் 5
ஏரிகள் சீர்திருத்தச் சட்டம் 7
நில அபிவிருத்திச் சட்டம் 8
கடனும்-வட்டியும் ஈடு வைத்துக் கொண்டு கடன் கொடுப்பவர் சட்டம் 9
ரயில்வே மூலம் அனுப்பும் சாமான்கள் காணமற்போனலும் குறைந்தாலும் 13
பத்திரங்கள்-ஸ்டாம்பு, ரிஜிஸ்டர் கட்டணம் உள்பட 17
கண்ட்ரோல்-லைசென்ஸ்-ரேஷன் விலை நிர்ணயம்-இதர சர்க்கார் அறிக்கைகள் 20
கேள்வியும்-பதிலும் 24

சந்தாதாரர்கள் கவனிக்கவும்

1. வருட சந்தாதாரர்களாகச் சேருபவர்களுக்கு சந்தா அனுப்பும் மாதத்திலிருந்து 12 இதழ்கள் அனுப்பப்படும். முந்திய மாத இதழ்கள் தேவையானல் பிரதி 1-க்கு அணு 6 வீதம் சேர்த்து அனுப்ப வேண்டும். "வக்கீல்" பத்திரிகை 1949 ஞ ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்டது.
2. ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
3. சந்தாதாரர்களாகச் சேர விரும்பும் நேயர்கள் தங்கள் விலாசத்தை கொட்டை எழுத்தில் தனித்தனி எழுத்தாக எழுதும்படி கேட்டுக்கொள்ளப் படுகிருர்கள்.

சவுத் இந்தியன்
சோப் ஒர்க்ஸ்
P. B. No. 38
தஞ்சாவூர்

தயாரிப்புகள்:—

அப்ஜா—ஆனந்தா—கதம்பா
ரஞ்சிதா—நீரடிமுத்து

நறுமணங்கமழும் ஸ்நான சோப்புகள்
யாவராலும் போற்றப்படுபவை.
மொத்த வியாபாரிகள் மட்டுமே
தேவைக்கு எழுதவும்.

தென் இந்திய ரெயில்வே
டெலிவரி & புக்கிங்
ஸர்வீஸ்

உங்களுக்கு ரயிலில் வரும் சாமான்களை உங்களிடத்தில் பொறுப்புடன் சேர்க்கவும், உங்கள் சாமான்களை புக்கிங் செய்து ரசீதை உங்களிடம் கொண்டு சேர்க்கவும் அடியிற்கண்ட இடத்தில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

D. SRINIVASAN,
Street Delivery Contractor,
7, Pillaiar Koil Street,
KUMBAKONAM.

ரேடியோக்களை திறமையுடன் பழுது பார்க்க
சுதர்சன்
ரேடியோ ஹவுஸ்
சக்கரபாணி கீழவீதி, :: கும்பகோணம்.

நாகப்பட்டினம், நாகூர், திருவாரூர், நன்னிலம்
இந்த இடங்களுக்கு
''வக்கீல்'' பத்திரிகை
பிரத்தியேக ஏஜண்ட்:—
D. வைத்தியநாதசாமி
(''பாரத் தேவி'' ஏஜண்ட்)
நாகப்பட்டினம்.

கும்பகோணம்
ஸ்ரீ சக்கரபாணி சுவாமி
தெற்கு வீதியிலுள்ள
கணபதி விலாஸ்
காபி ஹோட்டலில்
(போர்டிங் & லாட்ஜிங்)

ருசிகரமான சாப்பாடும் சிற்றுண்டியும் கிடைக்கும். Prop: G. கணேசன்

600 033

பட்டு & ஜரிகை ஆடை உற்பத்தியாளர்
பாலகிருஷ்ணய்யர்
ALB
மகாராஷ்டிர பெரிய தெரு, கும்பகோணம்

K. S. [illegible]யணசாமி & கோ.,
நியூஸ் ஏஜண்ட்
மடத்துத்தெரு, :: கும்பகோணம்.

மதுரை ஜில்லாவிற்கு
''வக்கீல்'' பத்திரிகை ஏஜண்ட்
திரு. T. R. நாகப்பநாடார் & சன்
ஸ்ரீ, வித்யா பேப்பர் மஹால்,
2/289, ராஜாஜி தெரு,
திருமங்கலம் – மதுரை.

வக்கீல்

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

மலர் 1 அக்டோபர் 1949 இதழ் 7

OFFICE OF THE REGISTRAR OF ... 2 ... 1949 MADRAS

தனிநபரின் சொத்துரிமையும் - சட்டசபைகளும்

"சொத்து" அல்லது "ஆஸ்தி" என்பதற்கு எக்காலத்திலும் எல்லா நாடுகளிலும் ஒரே பொருள் இருந்தது கிடையாது. பல நூற்றாண்டுகளுக்கு முன் 'சொத்தா'க பாவிக்கப்பட்டவை இப்பொழுது குப்பையாக இருக்கின்றன. இப்போது நாம் நம்முடைய 'ஆஸ்தி'யாகக் கருதி வரும் பொருள்கள் பல வருங்காலத்தில் மதிப்பிழந்ததாக ஆகக்கூடும். அவ்விதம் மாறி வருவதை நம் கண் முன்னும் பார்க்கின்றோம். இப்படி சொத்தின் மதிப்பை மாற்றக் கூடிய பல சக்திகளில் சட்டமும் ஒன்று. உதாரணமாக ஒரு ஜமீன் அல்லது இனாம் கிராமத்தை எடுத்துக் கொள்வோம். ஜமீன் இனாம் கிராமங்களை சர்க்காரே எடுத்துக் கொள்ளச் சட்டம் ஏற்பட்ட பிறகு இவைகளை ஏற்கனவே சொந்த ஆஸ்தியாக பாவித்து வந்த ஜமீன்தார்களும் இனாம்தார்களும் அச்சொத்தை இழக்க நேரவில்லையா? சட்டம் வருவதற்கு முன் அவர்கள் இஷ்டப்பட்டால் தங்கள் ஜமீன்களையும் இனாம்களையும் ஏராள விலைக்கு விற்றிருக்கக்கூடும். ஆனால் சட்டம் வந்த பிறகு அவர்களுக்கு சட்டப்படிக்குள்ள நஷ்ட ஈடு அடைய மட்டில்த்தான் பாத்தியம். இவர்களுக்கு யாதொரு நஷ்ட ஈடும் கொடுக்க வேண்டியதில்லை என்று சொல்லும் கக்ஷியும் இருக்கின்றது. சென்ற மாதத்தில் டில்லியில் நடந்த அரசியல் நிர்ணய சபையில் நிறைவேறிய ஒரு முக்கிய ஷரத்து "தனி நபரின் சொத்துரிமையும் நஷ்ட ஈடும்" என்ற விஷயத்தைப்பற்றியே.

இவ்விஷயத்தைப்பற்றி பண்டித நேரு பேசுகையில் "இதைப் போல் வேறு எந்த ஷரத்தும் அவ்வளவு தூரம் விவாதிக்கப்பட்டு மாறுபட்ட கருத்துக்கள் வெளியிடப்பட்டதாக நான் நினைக்கவில்லை. பல சட்ட மேதைகள் நுணுக்கமாக ஆராய்ந்து விவரங்களையும் விளக்கங்களையும் அள்ளி வீசினர். மாறுபட்ட கருத்துரைகளின் ஒளியால் ஒரு இருட்டுத்தான் நிலவியதென்று கூறலாம்" என்று சொன்னார். எந்தத் தனி நபரின் சொத்தையும் அவசியமான போது பொது ஜன நன்மைக்காக அரசாங்கம் எடுத்துக் கொள்ளலாமென்பதை எவரும் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் எப்படி எடுத்துக் கொள்வது; சொத்தின் சொந்தக்காரருக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமா; நஷ்ட ஈடு எவ்வளவு; அதை யார் நிர்ணயம் செய்வது; நீதி ஸ்தலங்களுக்கு இது விஷயமாய் என்ன அதிகாரங்கள் கொடுக்க வேண்டும் என்ற விஷயங்களைப்பற்றித்தான் மாறுபட்ட அபிப்பிராயங்கள் வெளியிடப்பட்டன. கடைசியாக நிறைவேறிய ஷரத்து ஒரு சமாதானமாகவே ஏற்பட்டது. அதாவது: சட்ட பூர்வமாக அல்லாது எவருடைய ஆஸ்தியும் ஆர்ஜிதப்படுத்தலாகாது. மேலும் ஆஸ்திகளை ஆர்ஜிதம் செய்வதற்காக சட்டம் செய்யும் போது அச்சட்டத்திலேயே நஷ்ட ஈடுத் தொகை வரையறுக்கப்பட்டிருக்க வேண்டும்; அல்லது நஷ்ட ஈடுத் தொகையை நிர்த்தாரணம் செய்யப்படுவதற்கான கொள்கைகளும் முறைகளும் அச்சட்டத்திலேயே இருக்க வேண்டும். அப்படி

இருந்தாலன்றி எவ்வித சொத்தும் சுவீகரிக்கப்பட மாட்டாது. அச்சட்டங்கள் ஜனாதிபதியின் அங்கீகாரம் பெறப்பட்டாலன்றி அமுலுக்கு வாராது. புது அரசியல் அமுலுக்கு வருவதற்கு முன் ஒரு வருடத்திற்குள் ஏற்பட்ட சட்டங்களும் இவ்விதம் ஜனாதிபதியின் அங்கீகாரம் பெற வேண்டும். அப்படி ஜனாதிபதியின் அங்கீகாரம் பெற்ற சட்டங்களும், தற்போது அமுலில் இருக்கும் சட்டங்களும் நஷ்ட ஈடு சரியாக ஏற்படுத்தவில்லை என்று கோர்ட்டுகளில் வாதாட முடியாது. இதற்கும் மாறாக இனி சட்ட சபைகள் சட்டம் செய்தால் அவை செல்லாது.

நீதி நிர்வாகப்பிரிவினை: பல நாட்களாக பொதுஜனங்களால் எதிர்பார்க்கப்பட்ட நீதி நிர்வாகப்பிரிவினை 2-10-'49 முதல் செங்கல்பட்டு, வட ஆற்காடு ஜில்லாக்களில் அமுலுக்கு வருகின்றது. கூடிய சீக்கிரமே மற்ற ஜில்லாக்களுக்கும் இந்த ஏற்பாடு விஸ்தரிக்கப்படுமென்று எதிர்பார்க்கின்றோம்.

"வக்கீல்" முந்திய இதழ்களின் பொருளடக்கம்

ஏப்ரல் 1949: (1) எமது பத்திரிகை. (2) குறிப்புகள். (3) சென்னை விவசாயி கடன் நிவாரண திருத்தச்சட்டம்-போக்கிய ரத்து. (4) எடை அளவை ஒழுங்குச் சட்டம். (5) கண்ட்ரோல்-லைசென்சு-ரேஷன்-விலை நிர்ணயம் இதர சர்க்கார் அறிக்கைகள். (6) கடைசியில் வந்த அறிக்கைகள். (7) கள்ள மார்க்கெட் மசோதா. (8) ஹிந்து(லா)சட்ட தொகுப்பு மசோதா.

மே 1949: (1) எங்கள் கடமை. (2) ஷாப் சட்டம். (3) சென்னை ஹிந்து பல தாரத்தடை விவாக ரத்துச் சட்டம். (4) ஜீவனும்ச சட்ட மாறுதல். (5) குதிரைப் பந்தய (சூதாட்ட) ஒழிப்புச் சட்டம். (6) வீண் வியாஜ்ய தடைச் சட்டம். (7) மாகாண சர்க்கார் நேரடியாக பஸ்-சர்வீஸ் நடத்தச் சட்டம். (8) மறுபடியும் விவசாயி கடன் நிவாரணச் சட்டத் திருத்தம். (9) பொதுப் புத்தக சாலைச் சட்டம். (10) விற்பனை வரி. (11) கண்ட்ரோல்-லைசென்சு ரேஷன்-விலை நிர்ணயம் இதர சர்க்கார் அறிக்கைகள்.

ஜூன் 1949: (1) குறிப்புக்கள். (2) ஷாப் சட்டம் (தொடர்ச்சி). (3) ஜமீன் இனும் ஒழிப்புச் சட்டம். (4) விற்பனை வரி. (தொடர்ச்சி). (5) கண்ட்ரோல்-லைசென்சு ரேஷன்-விலை நிர்ணயம் இதர சர்க்கார் அறிக்கைகள். (6) கிராமப் பஞ்சாயத்து மசோதா. (7) கேள்வியும்-பதிலும்.

ஜூலை 1949: (1) புதிய வரிகள். (2) ஜமீன் இனும் ஒழிப்புச் சட்டம் (தொடர்ச்சி). (3) ஷாப் சட்டம் (தொடர்ச்சி). (4) விற்பனை வரி (தொடர்ச்சி). (5) கண்ட்ரோல்-லைசென்சு-ரேஷன் விலை நிர்ணயம் இதர சர்க்கார் அறிக்கைகள்.

ஆகஸ்டு 1949: (1) நமது சுப்ரீம் கோர்ட். (2) ஹிந்து கலப்பு மணச் சட்டம். (3) கண்ட்ரோல் சட்டத் திருத்தம். (4) பத்திரங்கள் ரிஜிஸ்டர் செய்ய வரி சர்டிபிகேட். (5) பாகிஸ்தானிலிருந்து வருவோரைக் கட்டுப்படுத்தும் சட்டம். (6) சென்னை ஆலயப் பிரவேச (திருத்த)ச் சட்டம். (7) சென்னை ஜமீன் இனும் ஒழிப்புச் சட்ட விதிகள். (8) 1949-50 இன்கம் டாக்ஸ் விகிதம். (9) ஷாப் சட்டம் (தொடர்ச்சி). (10) விற்பனை வரி (தொடர்ச்சி). (11) கண்ட்ரோல்-லைசென்சு ரேஷன்- நிர்ணயம் இதர சர்க்கார் அறிக்கைகள். (12) விவசாய (அபிவிருத்தி) மசோதா. (13) கேள்வியும்-பதிலும்.

செப்டம்பர் 1949: (1) நமது நேயர்களுக்கு. (2) பாலிய விவாகத் தடை சட்டத்திருத்தம். (3) இந்தியன் பீனல்கோடு திருத்தம். (4) சென்னை 1949-ம் வருஷத்திய 1-வது அவசரச் சட்டம். (5) சென்னை 1949-ம் வருஷத்திய 2-வது அவசரச் சட்டம். (6) கடனும்-வட்டியும். (7) லஞ்சம். (8) சட்டத்திலும் எழுத்திற்கே மதிப்பு. (9) சென்னை ஜமீன் இனும் ஒழிப்புச்சட்டத்தை அமுல் நடத்த அதிகாரிகள். (10) கண்ட்ரோல்-லைசென்ஸ்-ரேஷன் விலை நிர்ணயம்-இதர சர்க்கார் அறிக்கைகள். (11) கேள்வியும்-பதிலும்.

பாங்குச் சட்டம்

(1949-ஆம் வருடத்திய 10-வது மத்திய சட்டம்)

பாங்க் என்பது பொது ஜனங்களின் பணத்தைப் பெற்றுக்கொண்டும் அதை வேண்டும் போதாவது அல்லது குறிப்பிட்ட காலத்திலாவது திருப்பிக் கொடுப்பதாக அவர்களிடம் ஒப்புக்கொண்டும் அப்பணத்தைக் கொண்டு வட்டிக்குக் கொடுத்து லேவாதேவித்தொழில் செய்யும் ஸ்தாபனமாகும். கம்பெனிகளாகப் பதிவு செய்து கொண்டு இத்தொழில் நடத்தும் ஸ்தாபனங்கள் இது வரை மற்ற வியாபாரக் கம்பெனிகள் போலவே இந்தியன் கம்பெனிச் சட்டத்திற்குத்தான் உட்பட்டிருந்தன. இப்பொழுது பாங்க் தொழில் நடத்தும் கம்பெனிகளுக்கு மட்டில் ஒரு தனிச் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. பாங்குத் தொழில் நடத்தும் கம்பெனிகளுக்கு இந்தியன் கம்பெனிச் சட்டமும் உண்டு; மேற்கொண்டு இச்சட்டம். பாங்குகளின் நிர்வாகத்தில் யாதொரு சம்பந்தமுமில்லாமல் அவைகளை நம்பி, பொது ஜனங்கள் தங்கள் பணத்தைப் போடுகின்றனர். இப்படி பொது ஜனங்களால் ஒப்படைக்கப்பட்ட பணங்களை மேற்படி பாங்குகளை நிர்வாகம் செய்யும் டைரக்டர்கள் முதலிய நிர்வாகஸ்தர்கள்தான் வட்டிக்குக் கொடுத்து லேவாதேவி செய்து வருகின்றனர். அவர்களை நியமிப்பது அந்தப் பாங்கின் ஷேர் ஹோல்டர்கள் என்று சொல்லக்கூடிய பங்குதாரர்களாக இருந்தாலும் பெரும் பான்மையான பங்குதாரர்களைக் கை வசம் வைத்துக் கொண்டிருக்கும் டைரக்டர்கள் தங்கள் இஷ்டப்படி செய்வதைத் தடுப்பதோ நிறுத்துவதோ சுலபமான காரியமல்ல. இவ்விஷயத்தைப்பற்றிப் பொது ஜனங்களுக்கு மனதில் இருக்கும் பயத்தை இப்புதுச் சட்டம் ஒருவாறு நிவர்த்தி செய்கின்றது. இப்புதுச் சட்டத்தில் பாங்குகளின் நிர்வாகத்தைப் பற்றிய பல ஷரத்துக்கள் இருந்தாலும் பொது மக்கள் தெரிந்து கொள்ள வேண்டிய சில முக்கிய அம்சங்களை மட்டில் கீழே கொடுத்திருக்கிறோம்.

"பாங்க்" என்ற பெயர்: இச்சட்டம் அமுலுக்கு வந்த இரண்டு வருடங்களுக்குப் பிறகு (அதாவது 10—3—1951-க்குப் பிறகு) பாங்குத் தொழில் நடத்தும் எல்லாக் கம்பெனிகளும் தங்கள் கம்பெனியின் பெயருடன் "பாங்க்" அல்லது "பாங்கர்" அல்லது "பாங்கிங்" என்ற மூன்று வார்த்தைகளில் ஏதாவது ஒரு வார்த்தையைச் சேர்த்துக் கொள்ளாமல் பாங்கு நடத்தக்கூடாது. மேலும் அந்தக் காலத்திற்குப்பிறகு, பாங்குத் தொழில் நடத்தாத வேறு கம்பெனிகள் மேற்படி வார்த்தைகளில் எதையும் தங்கள் விலாசத்துடன் சேர்த்துத் தொழில் நடத்தவும் கூடாது.

பாங்குகள் வேறு வியாபாரம் செய்யக் கூடாது: இனி பாங்குகள் நேரடியாகவாவது மறை முகமாவது எந்த வியாபாரத்திலும் ஈடுபடக்கூடாது; சாமான்களை வாங்கி விற்பதும் கூடாது; ஆனால் தங்களிடம் கடனுக்கு ஈடாக வைக்கப்பட்டிருக்கும் சாமான்களை மட்டில் அக்கடன் தொகைகளை வசூல் செய்யும் பொருட்டு விற்கலாம். இது வரையில் வேறு தொழில்களிலும் ஈடுபட்டிருந்த பாங்குகளும் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட வியாபாரத்தை இச்சட்டத் தேதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் பூர்த்திசெய்து கொள்ளவேண்டும்.

ஆனால் பாங்குத் தொழில் சம்பந்தமான சில காரியங்களை (ஷேர்கள், தங்கம் வெள்ளி இவைகளை வாங்கி விற்பது போன்றவை) மட்டில் நடத்தி வரலாம்.

பாங்குகள் இனி ஸ்தாவர சொத்துகளை வைத்திருக்க முடியாது: இனி பாங்குகள் தம் சொந்த உபயோகத்திற்கு அவசியமானவை தவிர வேறு எந்த ஸ்தாவர சொத்தையும் அவை வாங்கிய தேதியிலிருந்து ஏழு வருடங்களுக்கு மேல் வைத்திருக்கக் கூடாது. இப்பொழுது வைத்திருக்கும் ஸ்தாவர சொத்துக்களையும் இச்சட்டத் தேதியிலிருந்து ஏழு வருடங்களுக்கு மேல் வைத்திருக்கக் கூடாது; அதற்குள் அச்சொத்துக்களை விற்று விட வேண்டும். ஆனால் அதற்குள் விற்க முடியா விட்டால் அந்தப் பாங்கியில் பணம் போட்டவர்களின் நன்மையை உத்தேசித்து மேற்கொண்டு ஐந்து வருடங்கள் வரை அவகாசம் கொடுக்க ரிசர்வ் பாங்கிக்கு அதிகாரம் உண்டு.

பாங்குகளின் நிர்வாகம்: பாங்குகள் மானேஜிங் ஏஜண்டுகளை நியமிக்கக் கூடாது; மேலும் இன்ஸால்வெண்டாக தீர்மானிக்கப் பட்டவர்களையும், கடன் கொடுக்காமல் நிறுத்திக் கொண்டவர்களையும், கடன்காரர்களுடன் குறைத்துத் தீர்த்துக்கொண்டவர்களையும், துர் நடத்தை காரணமாய், தண்டனை அடைந்தவர்களையும் பாங்குகளில் வேலைக்கு அமர்த்திக்கொள்ளக்கூடாது. சம்பளத்திற்குப்பதிலாக லாபத்தில் ஒரு பங்கு கொடுத்தோ, பாங்கியின் வருமானத்திற்கு ஏற்றதாக இல்லாமல் ஜாஸ்தியான சம்பளம் கொடுத்தோ, ஒருவரையும் வேலையில் அமர்த்திக் கொள்ளக் கூடாது. இதில் சந்தேகம் ஏற்பட்டால் ரிசர்வ் பாங்கு முடிவு செய்யும். வேறு கம்பெனிகளில் டைரக்டர்களாக இருப்பவர்களும் வேறு தொழில் நடத்துபவரும் பாங்கிகளை நிர்வாகம் செய்யக் கூடாது. ஒரு தடவைக்கு ஐந்து வருடங்களுக்கு மேல் நிர்வாகம் செய்வதாகவும் ஒப்பந்தம் செய்து கொள்ள முடியாது. ஒரு பாங்கில் டைரக்டராக இருந்தால் வேறு ஒரு பாங்கிலும் டைரக்டராக இருக்கக்கூடாது.

பாங்குகளின் முதல் தொகை: இதுதான் இச்சட்டத்தில் ஒரு முக்கிய மாறுதல். சொற்பத் தொகையை மூலதனமாக வைத்துக் கொண்டு, (ஷேர்கள்) பங்குகள் சேர்த்து, பாங்குகள் ஆரம்பித்து விளம்பரத்தின் மூலமும் பல இடங்களில் கிளை ஆபீஸ் வைத்தும் ஏராளமான பொது ஜனங்களுடைய பணங்களை தங்கள் பாங்கில் போடும்படி செய்வதில் அபாயம் உண்டு. இனி அது முடியாது. இனி ஆரம்பிக்கப்படும் பாங்குகள் இச்சட்டத்தில் கண்டபடி மூலதனத்தை வசூல் செய்து கொண்டு தான் ஆரம்பிக்க வேண்டும். இப்பொழுது இருக்கும் பாங்குகளுக்கும் இவ்விதம் மூல தனமும் சேமிப்புத் தொகையும் இல்லா விட்டால் இச்சட்டத் தேதியிலிருந்து 3 வருடங்களுக்குள் அவ்விதம் மூலதனம் இருக்கும்படி செய்து கொண்டால் தான் பாங்கு நடத்தலாம். இந்தக் காலத்தை ரிசர்வ் பாங்கு இன்னும் ஒரு வருடம் நீடிக்கலாம். இடத்திற்கு ஏற்றவாறும் கிளைகள் வைப்பதற்கு ஏற்றவாறும் மூலதனம் இருக்க வேண்டும். இந்திய மாகாணங்களில் இல்லாமல் அயல் நாடுகளில் தலைமை ஆபீஸ் வைத்துக் கொண்டு இந்தியாவில் பாங்கு நடத்தினால் 15 லக்ஷ ரூபாயும் பம்பாய், கல்கத்தா இந்த ஊர்களிலும் பாங்கு நடத்தினால் 20 லக்ஷ ரூபாயும் ரிசர்வ் பாங்கியில் கட்டி வைத்திருக்க வேண்டும். இந்தியாவிலேயே இணைக்கப் பட்ட பாங்கியாக இருந்தால், பம்பாய் அல்லது கல்கத்தாவில் தொழில் நடத்த 10 லக்ஷ ரூபாயும், ஒரு மாகாணத்துக்கு மேல் இரண்டு அல்லது பல மாகாணங்களில் தொழில் நடத்த 5 லக்ஷ ரூபாயும் ஒரே மாகாணத்தில் தொழில் நடத்தப் பல ஆபீசுகள் இருந்தால் தலைமை ஆபீசுக்கு ஒரு லக்ஷ ரூபாயும், அதே ஜில்லாவிலுள்ள ஒவ்வொரு கிளை ஆபீசுக்கும் ரூ. 10 ஆயிரம் அதிகமாகவும், வேறு ஜில்லாக்களில் உள்ள கிளை ஆபீசு ஒவ்வொன்றுக்கும் ரூ. 25 ஆயிரம் அதிகமாகவும் கொண்ட மூலதனம் இருக்க வேண்டும். கிளைகள் இல்லாமல் ஒரே இடத்தில் பாங்கு நடத்த ஐம்பதாயிரம் ரூபாய் முதல் இருந்தால் போதும். மேலும் எவ்வளவு கிளைகள் இருந்தாலும்

மொத்தம் ரூ. 5 லக்ஷம் முதல் இருந்தால் போதும்.

செலவுகளும் நஷ்டங்களும் ஈடான பின் தான் லாபம் பிரித்துக் கொடுக்கப்படும்: சில சமயங்களில் பொது ஜனங்களின் மதிப்பை அடையும் எண்ணத்துடன், செலவுகளுக்கும் நஷ்டங்களுக்கும் ஈடு செய்யுமுன் லாபத்தை (ஷேர்ஹோல்டர்களுக்கு) பங்கு போட்டவர்களுக்கு பிரித்திக்கொடுப்பதுண்டு, இனி அது முடியாது. இச் செலவுகள் ஜாடாவும் கொடுக்கப்பட்டு மிஞ்சிய லாபத்தில் தான் (டிவிடண்ட்) பங்குதார்களுக்கு லாபப்பங்கு கொடுக்கலாம். மேலும் நிகர லாபத்தில் ஒவ்வொரு வருடமும் குறைந்தது 5-ல் 1 பங்கை (ரிசர்வ் பண்டாக) சேமிப்பு நிதியாக வைத்து வர வேண்டும். இது மூலதனத்திற்குச் சரியாக வரும் வரை இப்படிச் செய்து வர வேண்டும். அதுவும் போகப் பாக்கியைத்தான் பங்குகாரர்களுக்கு லாபம் பிரித்துக் கொடுக்கலாம்.

பாங்கு நடத்த லைசென்ஸ் தேவை: இனி பாங்குகள் ஆரம்பிக்கப்பட்டாலும் இப்பொழுது இருக்கும் பாங்குகள் இச்சட்டத்திலிருந்து 6 மாதத்திற்குள்ளும் ரிசர்வ் பாங்குக்கு மனுக் கொடுத்து, அதற்காக லைசென்ஸ் பெற்றுக்கொண்டுதான் தொழில் நடத்தலாம். லைசென்சை ரத்து செய்யவும் ரிசர்வ் பாங்குக்கு அதிகாரம் உண்டு. அதன் பேரில் மத்ய சர்க்காருக்கு அப்பீல் உண்டு. மேலும் ரிசர்வ் பாங்கியின் அனுமதியில்லாமல் ஒரு ஊரை விட்டு வேறு ஊருக்கு பாங்குகள் ஆபீசை மாற்ற முடியாது.

ரிசர்வ் பாங்கியின் அதிகாரம்: பாங்குகள் எவ்விதம் கடன்கள் கொடுக்க வேண்டுமென்பதைப்பற்றியும், எவ்விதம் கொடுக்கக் கூடாதென்றும், எவ்விதம் ஜாமீன் இருக்க வேண்டுமென்றும் பொதுவாகவாவது குறிப்பிட்ட பாங்குகளுக்காவது உத்திரவு செய்யலாம். எல்லாப் பாங்குகளும் கணக்குகளையும் புள்ளி விவரங்களையும் ரிசர்வ் பாங்குக்கு அனுப்ப வேண்டும். எந்த பாங்கையும் ரிசர்வ் பாங்கி பரிசோதனையும் மேல் விசாரணையும் செய்யலாம். கணக்குகளைப் பார்வையிடலாம். பொதுவாக எந்த பாங்கின் எவ்வித நடவடிக்கைகளையும் ரிசர்வ் பாங்கி தடுக்கலாம். மேலும் ஒரு பாங்கை மூடி கணக்கை நேர் செய்யவும் ரிசர்வ் பாங்கி கோரினல் அவர்களையே கோர்ட்டில் லிக்விடேடர்களாக நியமிக்க வேண்டும். இதைப் போல் ரிசர்வ் பாங்கிக்கு இன்னும் பல அதிகாரங்கள் இச்சட்டப்படி கொடுக்கப் பட்டிருக்கின்றன.

ஏரிகள் சீர்திருத்தச் சட்டம்

(1949-ஆம் வருடத்திய 19-ஆவது சென்னைச் சட்டம்)

இம்மாகாணத்தில் உணவு தானியங்களை அதிகமாக உற்பத்தி செய்வதற்கு வசதியளிக்கச் சர்க்காரால் செய்து வரும் பல ஏற்பாடுகளில் இச்சட்டமும் ஒன்று. இம்மாகாணத்திலுள்ள பாசன ஏரிகளில் இன்னும் அதிகமான தண்ணீரைத் தேக்கி வைத்துக் கொள்ளும் பொருட்டும் அத்தண்ணீரை விவசாயத்திற்கு இன்னும் அதிகமாகப் பயன்படும்படி செய்யவும் இச்சட்டம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. இதன்படி ஏரிகள் எந்த இடத்தில் யாருக்குச் சொந்தமானதாக இருந்தாலும், ரயத்துவாரி கிராமங்களில் இருந்தாலும் அல்லது ஜமீன்தாரி இனம் தாரி கிராமங்களிலிருந்தாலும் அவைகளின் கரைகளைத் தேவையானபடி உயர்த்தவும், ஏரியிலுள்ள நீர் விவசாயத்திற்குச் சரிவர உபயோகப்படும்படி எவ்விதமான வேலைகளைச் செய்யவும் மாகாண சர்க்காருக்கு இச்சட்டம் பூர்ண அதிகாரம் கொடுக்கின்றது. சர்க்காரே முதலில் அதற்கு வேண்டிய செலவுகளைச் செய்வார்கள். ஏரியின் சொந்தக்காரர்களான ஜமீன்தார், இனம்தார் போன்றவர்கள் இச்செலவின் எந்தப் பாகத்தையும் இனி கொடுக்க வேண்டியதில்லை. ஆனல் அவ்விதம் செய்யப்பட்ட மராமத்து வேலைகளினல் லாப

மடையும் நிலங்களின் சொந்தக்காரர்கள் வீதாசாரப்படி அந்தச் செலவைக் கொடுக்க வேண்டும். இதற்குப் பின்பு விதிகள் செய்யப்படும். வீதாசாரம் செய்யப்பட்ட தொகைகளை ஜில்லா கலெக்டர் வசூல் செய்வார். இச்சட்டப்படி சர்க்காருக்கு உள்ள அதிகாரங்களைச் செலுத்தக் கூடாதென்று தடை உத்தரவு (இஞ்சங்ஷன்) பிறப்பிக்கக் கோர்ட்டுகளுக்கு அதிகாரம் கிடையாது. அதற்காக யாராவது பிராது அல்லது கோர்ட்டுகளில் மனுப்போட்டால் அது ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. சர்க்கார் இச்சட்டப்படி செய்யும் வேலைகளினால் எந்த நிலத்தின் சொந்தக்காரருக்கு ஏதாவது நஷ்டம் ஏற்பட்டால் அதற்கு நஷ்டஈடு கொடுக்கப்படும். இதை ஜில்லா கலெக்டர் தான் தீர்மானிக்க வேண்டும். ஆனால் நஷ்டமடைந்தவர் மூன்றுவருடங்களுக்குள் எக்காரணத்தினால் தமக்கு நஷ்ட முண்டாயிற்றென்று கண்டு ஜில்லா கலெக்டருக்கு மனுக்கொடுக்க வேண்டும். கலெக்டர் விசாரணை செய்து தீர்மானம் செய்வார். அதன் பேரில் சென்னையில் சிடிசிவில் கோர்ட்டுக்கும் மற்ற இடங்களில் ஜில்லா கோர்ட்டுக்கும் 90 நாட்களுக்குள் அப்பீல் செய்து கொள்ளலாம். சர்க்காருக்கு விதிகள் செய்ய அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

(*19—7—1949* சென்னை சர்க்கார் கெஜட் பாகம் IV-B பக்கம் 127)

நில அபிவிருத்தி திட்ட தயாரிப்புச் சட்டம்

(1949-ஆம் வருடத்திய 22-ஆவது சென்னைச் சட்டம்)

முன் சொன்ன நோக்கத்துடன் சென்னை மாகாணத்திலுள்ள நிலங்களை அபிவிருத்தி செய்யத் திட்டம் தயாரிக்க ஒரு புது சட்டம் இயற்றப்பட்டிருக்கின்றது. இச்சட்டப்படி ரெவன்யூ போர்டார் நில அபிவிருத்திக்காகப் பல கிராமங்களை ஒன்று சேர்த்து, அதில் என்ன என்ன வேலைகளை யார் யார் செய்யவேண்டியதென்று திட்டம்போடலாம் முதலில் அதற்காக நியமிக்கப்பட்ட ஒரு உத்தியோகஸ்தர் திட்டம்போட்டு அதைப் பிரசுரம் செய்து, ஆக்ஷேபணைகள் கேட்டு, யுக்தமான முறையில் திட்டத்தை ரெவன்யூ போர்டார் அங்கீகாரம் செய்யலாம். முடிவாக அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களை காரியத்தில் நடத்த உத்தியோகஸ்தரையும் நியமிக்கலாம். அத்திட்டத்தில் எந்த எந்த நிலக்காரர் எவ்வளவு தொகை அத்திட்டச் செலவுக்காகக் கொடுக்க வேண்டுமென்று கண்டிருக்கின்றதோ அதைமொத்தமாகவாவது தவணையாகவாவது கொடுக்கக் கடமைப்பட்டவர்.

மாஜிஸ்ட்ரேட்: இந்த கேசை கோர்ட்டுக்கு வெளியிலே நீங்களே தீர்த்துக்கொள்ளக் கூடாதா?

கைதி: எஜமானே! நாங்கள் அப்படித் தீர்த்துக் கொண்டிருக்கும்போதுதான் போலீசார் அரஸ்ட் செய்தார்.

நீதிபதி: (60 வயதுள்ள கைதியைப்பார்த்து) உனக்கு 20 வருடம் சிறைவாசம் கொடுத்திருக்கிறேன்.

கைதி: (கண்ணீருடன்) எஜமானே! நான் அவ்வளவு காலம் உயிருடன் இருக்க முடியாதே.

நீதிபதி: (கருணையுடன்) கவலைப்படாதே. உன்னால் முடிந்தவரை இரு.

கடனும் - வட்டியும்

(V. S. விஜயராகவாச்சாரி B. A., B. L.)

ஈடு வைத்துக் கொண்டு கடன் கொடுப்பவர்கள் சட்டம்

இது ஒரு முக்கியமான சட்டம். சென்னை 1943-ஆம் வருடத்திய 23-ஆவது ஆக்ட். ஆங்கிலத்தில் "பான் புரோகர்ஸ் ஆக்ட்" என்று சொல்லப்படுவது. மாகாண சர்க்கார் இம்மாகாணத்தில் தேவையான இடங்களில் இச்சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வர அதிகாரமுண்டு. அதை அனுசரித்து முதலில் சில இடங்களில் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. இப்பொழுது சென்னை மாகாணம் முழுவதிலும் அமுலுக்கு வந்து விட்டது.
(சென்னை சர்க்கார் கெஜட் 5-8-47 பாகம் I)

இச்சட்டம் யாருக்குப் பொருந்தும்: ஜங்கம சொத்துக்களை ஈடு அல்லது அடகாக வைத்துக் கொண்டு அதன் பேரில் கடன் கொடுப்பதைத் தொழிலாகநடத்துவோரைக் கட்டுப்படுத்த மட்டில் இச்சட்டம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதே தொழில் இல்லாமல் ஏதாவது ஒரு சமயத்தில் ஈட்டின் பேரில் ஒருவர் கடன் கொடுத்தால் அவருக்கு இச்சட்டம் கிடையாது. மேலும் பாங்குத் தொழில் நடத்தும் கம்பெனிகள், கூட்டுறவுச் சங்கங்கள் இவை கொடுக்கும் கடன்களுக்கும், லேவா தேவி அல்லது வேறு தொழில் நடத்துபவர் அத்தொழில் சம்பந்தமாய்க் கொடுக்கும் கடன்களுக்கும் விவசாய சம்பந்தமாய்க் குத்தகைதாருக்கோ கூட்டாளிகள் ஒருவருக்கொருவரோ கொடுத்துக் கொள்ளும் கடன்களுக்கும் இச்சட்டம் கிடையாது. ஆனால் ஜங்கம சொத்துக்களை வாங்கி விற்பது போல் வெளிப்பார்வைக்குப் பாவனை செய்து கொண்டு, உள் வயணத்தில் அச்சொத்துக்களின் மீது கடன் கொடுத்து வாங்கும் தொழில் நடத்துபவர்கள் இச்சட்டத்திற்குள்ளாவார்கள்.

ஈடு வைத்துக் கொண்டு கடன் கொடுப்பவர்கள் கவனிக்க வேண்டிய விஷயங்கள்:

1. அவர்கள் இத்தொழிலை நடத்த லைசென்சு வாங்கிக் கொள்ள வேண்டும். பல இடங்களில் கடை வைத்திருப்பவர் ஒவ்வொரு இடத்திற்கும் தனித்தனி லைசென்சு வாங்கிக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு வருடமும் லைசென்சைப் புதிப்பித்துக் கொள்ள வேண்டும். கடை சென்னையில் இருந்தால் சென்னை கலெக்டருக்கும் மற்ற இடங்களில் ரிவன்யூ டிவிஷனல் ஆபீசருக்கும் (சப்கலெக்டர் அல்லது டிப்டி கலெக்டர்) மனுப்போட்டு லைசென்சு வாங்கிக் கொள்ள வேண்டும். லைசென்சு வாங்காமல் இத்தொழில் நடத்துவது குற்றமாகும். ரூ. 50 வரை அபராதம் விதிக்கப்படலாம். ஒரு தடவை தண்டிக்கப்பட்ட பிறகும் அதே வருடத்தில் லைசென்சு இல்லாமல் இத்தொழில் நடத்தினால் அவ்விதம் நடத்திய தினம் ஒன்றுக்கு ரூ. 10 வீதம் அபராதம் போடப்படலாம்.

2. இத்தொழில் நடத்துபவர் கடை வாசலில் அப்பிரதேச பாஷையில் தம் பெயரையும் அத்துடன் சேர்த்து, "ஈடு வைத்துக் கொண்டு கடன் கொடுப்பவர்" என்றும் பெரிய எழுத்துக்களால் எழுதி விளம்பரப்படுத்தி இருக்க வேண்டும்.

3. ஈடு வைப்பவருக்கு ஒரு அடகுச் சீட்டு (பான்—டிக்கட்) நமூனாப்படி கொடுக்க வேண்டும். கடன் வாங்குபவர் அச்சீட்டைப் பெற்றுக் கொண்டாலொழிய அவருடைய சாமானை ஈடாக வாங்கக் கூடாது. அட்குச் சீட்டில் இருக்க வேண்டிய விஷயங்கள் (நமூனா F படி):

தொடர் நம்பர்

கடன் கொடுத்தவர் பெயர்

அவர் இத்தொழில் நடத்த பெற்றிருக்கும் லைசென்சின் நம்பரும் தேதியும்

என்னிடம் அடியில்கண்ட விபரப்படி சாமான்கள் ஈடு வைக்கப்பட்டிருக்கின்றன.

அதாவது:

(1) ஈடு வைப்பவர் பெயரும் முழு விவரமும்.

(2) தேதி

(3) கடன் அசல் தொகை

(4) வட்டி

(5) சாமான்களின் முழு விபரமும் நகைகளாக இருந்தால் எடை.

(6) சாமான்களின் மதிப்பு.

(7) அவைகளை மீட்க ஒப்புக்கொள்ளப் படும் தேதி.

(8) ஈடு வைப்பவரின் கையெழுத்து அல்லது ரேகை.

கடன் கொடுப்பவரின் அல்லது அவருடைய ஏஜண்டின் கையெழுத்து

இச்சீட்டின் பின் பக்கத்தில் நமூனைப்படி சில விஷயங்கள் அச்சடிக்கப்பட்டிருக்க வேண்டும். அதாவது இச்சட்டத்தில் ஈட்டுக் கடனுக்காக வாங்கக் கூடிய வட்டி, மீட்க வேண்டிய காலம்; அடகுச் சீட்டுக் கெட்டுப் போனால் செய்ய வேண்டியவை முதலியவை.

4. மேலும் கடையில் யாவருக்கும் தெரியும் இடத்தில் அடகு சீட்டில் நமூனா F படி இருக்க வேண்டிய சங்கதிகளையும் விவரங்களையும் கடைக்கு வரும் அனைவருக்கும் தெரியும் விதமாய்ப் பிரதேச பாஷையில் எழுதி அல்லது அச்சடித்து விளம்பரப் படுத்தி வைத்திருக்க வேண்டும்.

5. வட்டிக் கடன் தொகை ரூ. 25 அல்லது அதற்குள் இருந்தால் மாதம் 1-க்கு ரூ. 1-க்கு $1\frac{1}{2}$ தம்படிக்குள்ளும், அதற்கு மேல் இருக்கும் கடன் தொகைகளுக்கு மாதம் 1-க்கு ரூ. 1-க்கு 1 தம்படிக்குள்ளும் வட்டி இருக்கவேண்டியது. அதற்கு மேல் வட்டி செல்லாது.

6. ஈடு வைத்துக் கொண்டு கடன் கொடுப்பார்கள் இச்சட்டப்படி கீழ்க்கண்ட கணக்குப் புத்தகங்களும் நமூனாக்களும் வைத்துக்கொள்ள வேண்டும் அதாவது:

(1) ஈடு ரிஜிஸ்டர்.

(2) அடகுச் சீட்டு.

(3) ஈடு சாமான்கள் விற்பனைப் புத்தகம்.

(4) ஈட்டுச் சாமானை அதன் சொந்தக்காரர் பாத்தியம் கொண்டாடிக் கொடுக்கும் உறுதி மொழி நமூனா (பாரம்).

(5) அடகுச் சீட்டுக் கெட்டுப் போய் விட்டால் கடன் வாங்கியவர் கொடுக்கும் உறுதி மொழி நமூனா (பாரம்).

(6) ஈடு வைத்த சாமானை மீட்டுக்கொண்டதற்குக் கடன் வாங்கியவர் கொடுக்கும் ரசீது கடன் வாங்கியவருக்கு அடகுச் சீட்டு, உறுதி மொழி நமூனாக்கள் இவைகளை, அதற்காக யாதொரு கட்டணமும் வாங்கிக் கொள்ளாமல், கொடுக்கவேண்டும்.

7. கடன் வாங்கியவர் கொடுக்கும் ஒவ்வொரு தொகைக்கும் ரசீது கொடுக்க வேண்டும்.

8. கடன் வாங்கியவர் கேட்டால் ஈடு ரிஜிஸ்டரில் கண்ட விவரங்களுடன் பாக்கி இருக்கும் தொகையையும் கண்டு அவருக்குக் கணக்கு நகல் கொடுக்க வேண்டும்.

குற்றங்களும் தண்டனைகளும்: கடன் கொடுப்பவர் அடகுச் சீட்டிலோ கணக்குப் புத்தகங்களிலோ கடன் கொடுத்ததாகக் கண்டிருக்கும் தொகையைவிடக்குறைவான தொகையையே கடனாகக் கொடுத்திருந்தாலும், அவைகளில் கண்டிருக்கும் வட்டியை விட அதிக வட்டி வாங்கினாலும் அது குற்றமாகும். ரூ. 500 வரை அதற்கு அபராதம் விதிக்கப்படலாம். இரண்டாவது முறை அதே குற்றத்திற்காகத் தண்டனை அடைந்த

187690

வருடைய லைசென்சும் ரத்து செய்யப்படலாம். கீழே கண்ட குற்றங்களுக்கு 6 மாதம் வரை சிறைத் தண்டனையும் ரூ. 100 வரை அபராதமும் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம். அதாவது: 14 வயது பூர்த்தியாகாதவராக அல்லது குடி மயக்கத்தில் இருப்பவராகத் தோன்றுபவரிடம் ஈடு சாமான்களை வாங்கினாலும்; தன்னைப் போல் தொழில் நடத்தும் வேறு ஒருவரால் கொடுக்கப்பட்ட அடகுச் சீட்டை விலைக்கு வாங்கினாலும் அதை அடகாக வைத்துக் கொண்டு அதன்பேரில் கடன் கொடுத்தாலும்; ஈட்டுச் சாமான்களை வாங்க 16 வயதிற்குட்பட்டவரை வேலையில் அமர்த்திக் கொண்டாலும், தன்னிடம் ஈடாக இருக்கும் சாமானை, இச்சட்டப்படிக்குள்ள பகிரங்க ஏலத்தில் அல்லது வேறு வகையில் வாங்கி விட்டாலும்; தன்னிடம் ஈடாக இருக்கும் சாமானைத்தானே விலைக்கு வாங்கும் எண்ணத்துடன் கடன்காரர் அதை மீட்டுக் கொள்வது போல் பாவனை செய்து கொள்ளும்படி செய்தாலும்; ஈட்டைச்சட்டப்படி மீட்டுக் கொள்ளக்கூடிய காலத்திற்குள் ஈடு வைத்தவருடனாவது ஈட்டுச் சாமானின் சொந்தக்காரருடனாவது அச்சாமானை வாங்கவோ, விற்கவோ வேறு வகை செய்யவோ ஒப்பந்தம் செய்து கொண்டாலும்; இச்சட்டத்தின் ஷரத்துக்களுக்கு முரணாக ஈட்டுச் சாமானை விற்பனை செய்தாலும் மேற்கண்ட கடுமையான தண்டனைக்குள்ளாவார்கள்.

ஈடு வைப்பவர்களின் நடத்தையும் குற்றமாகலாம்: ஒரு சாமானை ஈடாக வைத்துக் கொண்டு கடன் கேட்பவர் அந்தச் சாமான், அவரிடம் எப்படி வந்ததென்று சரியாகச் சொல்ல முடியாமலிருந்தாலும், சொல்ல மறுத்தாலும், அது சம்பந்தமாய்ப் பொய் சொன்னாலும், தம் பெயர் விலாசம் இவைகளைப் பொய்யாகச் சொன்னாலும், அல்லது அந்த ஈடு சொத்துக்களின் சொந்தக்காரருடைய பெயர் விலாசம் இவைகளைப் பொய்யாகச் சொன்னாலும், தமக்கு மீட்கபாத்தியமில்லாமலிருக்கும்பொழுது ஒரு ஈட்டுச் சாமானை மீட்க முயற்சித்தாலும் குற்றமாகும். ஆறு மாதம் வரை சிறைத் தண்டனையும் ரூ. 100 வரை அபராதமும் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம். கடன் கேட்பவர் ஈட்டுச் சாமான் தமமிடம் எப்படி வந்ததென்று சொல்ல முடியாமல் இருந்தாலும் சொல்ல மறுத்தாலும், அந்த ஈட்டுச் சாமான் திருட்டுச் சாமானாகவோ வேறு சட்ட விரோதமான முறையில் கைப்பற்றப்பட்டதாகவோ தோன்றினால் ஈடு வைத்துக் கொண்டு கடன் கொடுப்பவர் அவரையும் ஈடு வைக்கக் கொண்டு வந்திருக்கும் சாமானையும் நிறுத்தி வைத்துக் கொண்டு சமீபத்திலுள்ள போலீஸ் ஸ்டேஷனுக்குத் தெரிவித்து, போலீசாரிடம் ஆசாமியையும் சாமானையும் ஒப்படைக்க வேண்டும். மேலும் திருட்டுப் போன சாமான்களின் ஜாப்தாவைப் போலீசார் ஈட்டுக் கடன் கொடுப்பவரிடம் கொடுத்திருந்தால் அதில் கண்டபடி உள்ள சாமான்கள் தம்மிடம் ஏற்கனவே ஈடாக இருந்தாலும் புதிதாக ஈட்டுக்காக வந்தாலும் உடனே போலீசாருக்குத் தெரியப் படுத்த வேண்டும். போலீசார் கேட்டால் சாமான்களையும் அவர்களிடம் ஒப்படைக்க வேண்டியது.

அடகுச் சீட்டு: இச்சட்டப்படி ஒரு சாமானை ஈடாக வைத்துக் கடன் கொடுப்பவர் ஒரு அடகுச் சீட்டு கட்டாயமாகக் கொடுக்க வேண்டும் என்று மேலே சொல்லப்பட்டது. கடன் வாங்கியவர் இந்த அடகுச் சீட்டை வெகு ஜாக்கிரதையாக வைத்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால் இச்சட்டப்படி இந்த அடகுச் சீட்டை யார் எடுத்துக் கொண்டு வந்து அசல் வட்டிக் கடனை திரும்பக் கொடுத்தாலும் கடன் கொடுத்தவர் அதைப் பெற்றுக் கொண்டு ஈடு சாமானை அவரிடம் கொடுக்க வேண்டியது அவருடைய கடமை. யார் கையில் இந்த அடகுச் சீட்டு இருக்கிறதோ அவருக்குத்தான் ஈட்டுச் சாமானை மீட்கப் பாத்தியம் இருப்பதாக வைத்துக் கொள்ளலாம். மேலும் அடகுச் சீட்டு இல்லாமல் ஈடு வைத்த சாமானைத் திருப்பிக் கொடுக்கும்படி கேட்டால், கடன் கொடுத்தவர் ஈட்டுச் சாமானைத் திருப்பிக் கொடுக்க மறுக்கலாம்.

அடகுச் சீட்டு கெட்டுப் போனால்: ஈட்டுச் சாமானின் சொந்தக்காரர் தம்மிடம்

அடகுச் சீட்டு இல்லாமல் இருந்தாலும் அல்லது அடகுச் சீட்டு வைத்துக் கொள்ள வேண்டியவர் அதை இழந்தாலும் கடன் கொடுத்தவரிடம் ஒரு நமூனவில் உறுதி மொழி எழுதிக் கொடுத்து விட்டால் அது அடகுச் சீட்டைத் திருப்பிக் கொடுத்தது போலவே ஆகும். ஆனல் கடன் தொகை ரூ. 250-க்கு மேல் இருந்தால் அந்த இடத்தில் வாசிக்கப்படும் ஒரு பத்திரிகையில் தொடர்ச்சியாக இரண்டு தினங்களில் பிரசுரம் செய்ய வேண்டும். அப்பிரசுரத்தில் கடன் கொடுத்தவர் பெயர், லைசென்சு விபரம், இடம், ஈட்டுச் சாமானின் விபரம், ஈடு வைத்தவர் பெயரும் விபரமும் பிரசுரம் செய்பவருக்குள்ள பாத்தியமும் ஆகிய இவைகளைக் கண்டிருக்க வேண்டும். அப்படி பிரசுரமான 21 தினங்கள் கடந்த பிறகு தான் கடன் கொடுத்தவருக்கு உறுதி மொழிப்பத்திரம் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும். மேலும் ஈட்டுச் சாமானைப் பெற்றுக் கொள்ளக் கடன் கொடுத்தவருக்கோ அல்லது அவ்விடத்திய தாசில்தார் அல்லது டிப்டி தாசில்தாருக்கோ திருப்திகரமான ஜாமீன் பத்திரம் எழுதிக் கொடுக்கவேண்டும். உறுதிமொழி நமூனு வாங்கி 15 தினங்களுக்கும் உறுதி மொழிப் பத்திரத்தைக் கடன் கொடுத்தவரிடம் திரும்பப் பூர்த்தி செய்து கொடுத்து விட வேண்டும்.

ஈடு வைக்கப்பட்ட சாமான் தீ விபத்தால் அழிந்தாலும் சேதமடைந்தாலும்: கடன் கொடுத்தவர் அதன் விலையை ஈடு வைத்தவருக்குத்திருப்பிக் கொடுக்கக் கடமைப் பட்டவரே.

ஈட்டுச் சாமானை மீட்கக் கெடு: கடன் வாங்குபவர் தம் சாமானை ஈடு வைத்த ஒரு வருடம் ஏழு நாட்களுக்குள் மீட்கலாம். அப்படி மீட்கப்படா விட்டால் அதன் பேரில் வாங்கிய கடன் தொகை ரூ. 10-க்கு மேற்படாமலிருந்தால், கெடு முடிந்ததும் ஈட்டுச் சாமான் முழுகிப் போய் விடும். அதாவது அது கடன் கொடுத்தவருடைய சொந்த சொத்தாகி விடும். கடன் தொகை ரூ. 10-க்கு மேல் இருந்தால், இச்சட்டப்படி ஏலம் போகும் வரை அதை மீட்கலாம். இந்த ஒரு வருடக் கெடுவைக் கடன் வாங்கியவர் கொடுத்தவர் இருவரும் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் அதிகப்படுத்தலாம். ரூ. 10-க்கு மேற்பட்ட ஈட்டுச் சாமான்களைப் பகிரங்கமான ஏலத்தில் தான் விற்கலாம். அந்த ஏலத்தில் கடன் கொடுத்தவரும் ஏலம் கேட்டுச் சாமானை விலைக்கு வாங்கிக் கொள்ளலாம். சென்னையில் போலீஸ் கமிஷனராலும் மற்ற இடங்களில் ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டாலும் அங்கீகரிக்கப் பட்டவர்கள் மூலமாகத்தான் பகிரங்க ஏலம் போட வேண்டும். ஏல காலத்தில் ஈட்டுச் சாமான்களை யாவருக்கும் தெரியும்படி வைக்க வேண்டும். ஏலம் போடப்படும் சாமான்களின் ஜாப்தா அச்சடிக்கப்பட்டுப் பிரசுரம் செய்யப்பட வேண்டும். அதில் கடன் கொடுத்தவர் பெயர், கடன் தேதி, சாமான் விபரம், கடன் வாங்கியவர் பெயர், ஏலத்தேதி இடம் மணி இவைகள் இருக்க வேண்டும். ஏலத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பே அந்த ஜாப்தா கடன் வாங்கியவருக்கு ரிஜிஸ்டர் தபால் மூலம் அனுப்பப்படும். இன்னும் போலீஸ் ஸ்டேஷன்களுக்கும் ஜாப்தா அனுப்பப்படும். பத்திரிகைகளிலும் ஏல விளம்பரம் செய்யப்படும்.

வட்டிபோய் விடும்: கடன் கொடுத்தவர் அடகுச் சீட்டுக் கொடுக்கா விட்டாலும், கடன் வாங்கியவர் திருப்பிக் கொடுக்கும் தொகைகளுக்கு ரசீது கொடுக்கா விட்டாலும், கணக்கு நகல் கேட்டு, கொடுக்கா விட்டாலும் மேற்கண்ட தவறுதல்கள் நீடிக்கும் காலத்திற்குள்ள ஜாடா வட்டியையும் கடன் கொடுப்பவர் இழந்து விடுவார். (இது மேற்கண்ட குற்றங்களுக்கு உள்ள தண்டனை தவிர)

செலவு தொகை போய் விடும்: மேலும் இச்சட்டப்படி வைத்துக் கொள்ள வேண்டிய கணக்குகளும் ரிஜிஸ்டர்களும் வைத்துக் கொள்ளாதவருக்குக் கோர்ட்டில் அவர் செய்யும் தாவாக்களுக்குச் செலவு தொகை கொடுக்கப்பட மாட்டாது.

அடுத்த இதழில் "சென்னை விவசாயிகள் கடன் நிவாரண திருத்தச் சட்டம், புதிய திருத்தங்களுடன்" எழுதப்படும்.

ரயில்வே மூலம் அனுப்பும் சாமான்கள் காணமற்போனாலும் குறைந்தாலும்

(V. தியாகராஜன் B. A., B. L.)

ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்கு ரயில்வே மூலம் அனுப்பும் சாமான்கள் சில சமயங்களில் முழுவதுமே காணமற் போய் விடுவதுண்டு ; சில சமயங்களில் அனுப்பும் பொழுது இருந்ததை விட, அச்சாமான்கள் போய்ச் சேருமிடத்தில், அவை நிறையிலோ எண்ணிக்கையிலோ குறைவாக இருப்பது முண்டு. சாமான்கள் அனுப்பப்படும் ஊர் சமீபத்திலிருக்கலாம் அல்லது வெகுதூரத்திலிருக்கலாம் ; அச்சாமான்கள் ஒரே ரயில்வே மூலம் எடுத்துச் செல்லப் படலாம் ; அல்லது பல ரயில்வேக்கள் மூலம் கொண்டு போகப்படலாம். இந்த நிலைமையில் சாமான்கள் போய்ச் சேர வேண்டிய இடத்தில் பார்க்கப்படும் போது சாமான்களுக்குச் சேதமேற்பட்டிருக்கக் கூடும். அனுப்பும் போது இருந்ததை விடச் சாமான்களின் எடை குறைவாக இருப்பது நடு வழியில் அவை கையாடப்பட்டிருப்பதைக் குறிக்கலாம். இந்தச் சந்தர்ப்பங்களில் ரயில்வேயை நம்பிச் சாமான்களைக் கொடுத்தவருக்கோ அவைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டியவருக்கோ நஷ்டம் ஏற்படுகின்றது.

அப்படி நஷ்டம் அடைந்தவர் செய்யக் கூடியது என்ன? ரயில்வே ரசீதைக் கொடுத்து, குறைவாக வந்திருக்கும் சாமான்களை எடுத்துக் கொள்வதா ? எடுத்துக் கொள்ள மறுப்பதா ? மறுபடியும் எடை போட்டுப் பதிய வைத்துக் கொள்ளும்படி வற்புறுத்தலாமா ? காணமற் போன அல்லது குறைந்த சாமான்களின் விலையை ரயில்வேயிடம் நஷ்டம் கேட்க முடியுமா ? யார் நஷ்டம் கேட்பது ? யாரைக்கேட்பது ? எந்தக் காலத்திற்குள் கேட்க வேண்டும் ? ரயில்வே நிர்வாகம் நஷ்டம் கொடுக்க மறுத்தால் கோர்ட்டில் பிராது செய்யலாமா ? பிராது யார் பேரில் தொடருவது ? எந்தக் காலத்திற்குள் தொடர வேண்டும் ? இது போன்ற பல பிரச்னைகளும் சந்தேகங்களும் ஏற்படுகின்றன. இந்திய ரயில்வே சட்டத்தில் இது சம்பந்தமாய் உள்ள சில அடிப் படையான விதிகளைச் சுருக்கமாய்க் கவனிப்போம்.

முதலில், பொது ஜனங்களின் சாமான்களை (கால் நடை முதலியவை உள்பட) ஓரிடமிருந்து வேறு ஓர் இடத்திற்கு, அதற்குள்ள கூலி பெற்று, ஏற்றிச் செல் லும் ரயில்வேயின் பொறுப்பு, சட்டப்படி எவ்வளவு என்று பார்ப்போம். அப்பொறுப்பு பின் வருமாறு : (1) நிதான முள்ள ஒரு மனிதன் தன் சொந்தச் சாமான்களை அதே சந்தர்ப்பங்களில் எவ்வளவு ஜாக்கிரதையுடன் கவனித்துக் கொள்வானே அதே அளவு ஜாக்கிரதையுடன் ஒரு ரயில் நிர்வாகமும், தன்னிடம், எடுத்துச் செல்வதற்காக, ஒப்படைக்கப்பட்ட சாமான்களையும் கவனித்துக் கொள்ள வேண்டும். (2) அப்படி ஜாக்கிரதையுடன் இருந்தும் கூட அச்சாமான்கள் காணமற்போனாலும், அழிந்து போனாலும், குறைந்தாலும், சீர் கேடான ஸ்திதியில் ஆகிவிட்டாலும், அதற்கு ரயில்வே நிர்வாகம் பொறுப்பாளி அல்ல. (3) ஆனல் ரெயில்வே நிர்வாகத்தின் தவறுதலால் இவ்விதம் நஷ்டம் நேர்ந்தால் ரயில்வேதான் அதற்குப் பொறுப்பு வகிக்கவேண்டியது, நஷ்டம் கொடுக்கவேண்டும். சாமான்களை ரெயில்வே மூலம் அனுப்புபவர் ரெயில்வே நிர்வாகத்துடன் யாதொரு விசேஷ ஒப்பந்தமும் செய்துகொள்ளாமல் சாமான்களை அனுப்பினல், மேற்கண்ட மூன்று அடிப் படையான விதிகளை வைத்துக்கொண்டு ரெயில்வேயின் பொறுப்பு நிர்ணயம் செய்

யப்படும். ஆனால், அனுப்பும் சாமான்களின் தன்மையை உத்தேசித்தும், சாதாரண கட்டணங்களைவிடக் குறைவான கட்டணங்கள் கட்டி அனுப்பினால் போதுமென்று அனுப்புபவருக்குத் தோன்றி அவர் குறைவான கட்டணம் கட்டி அனுப்பினாலும், சாமான் அனுப்புபவர் ரயில்வேயுடன் விசேஷ ஒப்பந்தம் செய்துகொள்ளலாம். அவ்விதம் செய்துகொள்ளும் ஒப்பந்தங்கள் ரயில்வே நிர்வாகத்தின் மேலே கண்ட பொறுப்பைக் குறைக்கக்கூடியது. முன் கூட்டியே மத்ய சர்க்காரால் சில விசேஷ ஒப்பந்தங்கள் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளுக்குப் பொறுப்புச் சீட்டு ("ரிஸ்க்நோட்") என்று பெயர். ஒவ்வொரு விதமான ரிஸ்க்நோட்டுக்கும் ஒரு அடையாள எழுத்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ரிஸ்க்நோட் ஏ (A); பி (B) இவ்வாறு. சாமான் அனுப்புபவர் ஏதாவது ஒரு ரிஸ்க்நோட்டை ஒப்புக்கொண்டு அதில் கையெழுத்துச் செய்து ரயில்வே அதிகாரியிடம் கொடுத்துவிட்டால், சாமான்களுக்கு என்ன நஷ்டம் ஏற்பட்டாலும், (பொது விதிக்கு மாறாக) இந்த ரிஸ்க்நோட்டில் கண்ட அளவுக்குத்தான் ரயில்வேயின் பொறுப்பிருக்கும். வழக்கு ஏற்பட்டாலும் ரிஸ்க்நோட்டுக்களின் வாசகங்களையும், ஷரத்துக்களையும் கொண்டுதான் ரயில்வேயின் பொறுப்பு நிர்ணயம் செய்யப்படும். சில சமயங்களில் இந்த ரிஸ்க்நோட்டுகளின் வாசகங்களினால், சாமான்களுக்கு எவ்வித சேதம் ஏற்பட்டாலும் ரயில்வேயிடம் யாதொரு நஷ்டமும் கேட்க முடியாத நிலைமை ஏற்படுகிறது.

ஆகையால், இப்போது அமுலில் இருக்கும் சில முக்கியமான பொறுப்புச் சீட்டுகள் அதாவது ரிஸ்க்நோட்டுகளின் அமைப்பையும், வாசகங்களையும் தெரிந்துகொள்வது அவசியம்.

இப்போது அமுலில் இருக்கும் ரிஸ்க் நோட்டுகள்: ரிஸ்க் நோட் A (ஏ); B (பி); C (ஸி); D (டி); E (ஈ); F (எப்); G (ஜி); H (எச்); X (எக்ஸ்); Y (ஒய்); Z (இஜட்)

ரிஸ்க் நோட் (ஏ) A: அனுப்பப்படும் சாமான்கள் ஏற்கனவே சீர் கேடான நிலைமையில் இருந்தாலும், சரிவரக் கட்டப்படாமல் வழியில் சேதம் ஏற்படக்கூடிய நிலைமையில் இருந்தாலும் இந்த விசேஷ ஒப்பந்தம் செய்துகொள்ளப்படுகின்றது. ரிஸ்க் நோட் நமூனாக்கள் எல்லாம் அச்சடிக்கப்பட்டிருக்கும். அவைகளின் ஷரத்துக்களைச் சாமான் அனுப்புபவரும் மாற்ற முடியாது; ரயில்வே நிர்வாகமும் மாற்ற முடியாது; ஏனென்றால் ரயில்வே சட்டப்படி இந்த விசேஷ ஒப்பந்தங்களின் வாசகம் மத்ய சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்டதாக இருக்க வேண்டும். இந்த விசேஷ ஒப்பந்தப்படி சாமான்கள் ரயில்வே மூலம் அனுப்பப்பட்டால், சாமான்களுக்கு என்ன கெடுதி அல்லது சேதம் நேர்ந்த போதிலும், அது திருப்பிக் கொடுக்கும் போது எந்த ஸ்திதியில் இருந்த போதிலும் அதற்கு ரயில்வே பொறுப்பாளி அல்ல. ஆனால் ரயில்வே சிப்பந்திகளின் தவறான நடத்தையால் நஷ்டம் ஏற்பட்டால் ரயில்வேக்குப் பொறுப்பு ஏற்படும். இதை ருசுப்படுத்த வேண்டிய கடமை நஷ்ட ஈடு கேட்பவருடையது. இது சில சமயங்களில் அசாத்தியமாகி விடலாம். உதாரணமாக: இந்த ஒப்பந்தத்தின் கீழ், சரிவரக் கட்டப்படாத சில ஜவுளி (பேல்கள்) மூட்டைகள் அனுப்பப்பட்டன. போய்ச் சேருமிடத்தில் பார்க்கும்போது பேல்களிலிருந்து ஜவுளி வழி பூராவும் நழுவிக் கொண்டே வந்ததாகத் தெரிய வந்தது. யாதொரு விசேஷ ஒப்பந்தமும் இல்லா விட்டால் ரயில்வே நிர்வாகம் இந்த நஷ்டத்திற்கு ஈடு செய்ய நேரிடும். ஏனென்றால் முதலில் சொன்ன அடிப்படையான விதியின்படி ஒரு நிதானமான மனிதன் தன் சொந்தச் சாமான்களை இப்படி அஜாக்கிரதையாக வழியில் நழுவ விடமாட்டான். ரயில்வே நிர்வாகமும் அதே ஜாக்கிரதையுடன் இந்த ஜவுளி மூட்டைகளைக் கவனித்து வர வேண்டும். ஆனால் சாமான் அனுப்பியவர் இந்த ரிஸ்க் நோட் A (ஏ) என்ற விசேஷ ஒப்பந்தத்தை ஒப்புக் கொண்டு கையெழுத்திப் போட்டதால் அதன்படி சாமான் போய்ச் சேருமிடத்தில் அதன் ஸ்திதி எப்

படி இருந்த போதிலும் அவருக்கு யாதொரு நஷ்டமும் கிடைக்காது. (1931 அலகாபாத் 135) ஆனால் இந்தக் காணமற் போன ஜவுளிகளை ஒரு ரயில்வே சிப்பந்தியே திருடிவிட்டார் என்று ருஜூ செய்தால் நஷ்டம் கிடைக்கும். மேலும் முழுவதுமே வரா விட்டால் ரயில்வே நிர்வாகம் நஷ்டம் கொடுக்க நேரிடும். ஏனென்றால் சாமான்கள் 'திருப்பிக் கொடுக்கப்படும் பொழுது' என்ன நிலைமையில் இருந்தாலும் ரயில்வே பொறுப்பாளி அல்ல என்று தான் இந்த ஒப்பந்தத்தில் இருக்கின்றது. சாமான்களைத் திருப்பியே கொடுக்கா விட்டால் ரயில்வேயின் பொறுப்பு பாதிக்கப்படவில்லை. (1948 பாட்ன 48)

ரிஸ்க்நோட் (பி) B: வெவ்வேறு வகைச் சாமான்களை ரெயில் மூலம் அனுப்புவதாக இருந்தால் அவைகளுக்குச் சாதாரணமாய் எவ்வளவு கட்டணம் கட்டவேண்டுமென்று ரெயில்வே 'டாரிப்' என்று சொல்லப்படும் கட்டண விகிதம் இருக்கின்றது. அந்தக் கட்டணத்தைச் செலுத்தி சாமான் அனுப்பினால்; மேலே சொன்ன அடிப்படையான விதிகளின்படி ரயில்வேயின் பொறுப்பு நிர்ணயம் செய்யப்படும். ஆனால், அவ்வளவு கட்டணம்கட்ட இஷ்டப்படாமல், சாமான்களை அனுப்புபவர் குறைந்த கட்டணம் கட்டி, சாமான்களை அனுப்ப விரும்பினால் அவர் ரிஸ்க்நோட் (பி) B என்ற விசேஷ ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போடவேண்டும். இவ்விசேஷ ஒப்பந்தப்படியும் அனுப்பப்படும் சாமான்களுக்கு எக்காரணத்தைக் கொண்டும் எவ்விதமான சேதம் ஏற்பட்ட போதிலும் ரயில்வே நிர்வாகம் பொறுப்பாளி ஆகமாட்டாது. இதற்கு, "சொந்தக்காரர் பொறுப்பு" (ஓனர்ஸ் ரிஸ்க்) இல் அனுப்பப்படுவது என்று சொல்லுவதுமுண்டு. ஆனால், இதிலும் ரயில்வே சிப்பந்திகளின் தப்பு நடத்தையால் நஷ்டம் ஏற்பட்டதாக ருசுப்பித்தால் ரயில்வே நிர்வாகம் நஷ்ட ஈடு கொடுக்கவேண்டும். இந்த ஒப்பந்தத்தில் ஒரு விசேஷம் என்னவென்றால், ரயிலுக்கு விபத்து, நெருப்பு இந்த இரண்டு காரணங்களைத் தவிர மற்ற எந்தக் காரணத்தினாலும் சரியாகக் கட்டி அனுப்பப்பட்ட முழுச் சாமான்களும் கெட்டுப் போயிருந்தாலும் பல மூட்டைகள் அல்லது கட்டுக்களில் சில முழு மூட்டை அல்லது கட்டுகள் கெட்டுப்போயிருந்தாலும், சரியாகக் கட்டப்பட்ட மூட்டை அல்லது கட்டுகளிலிருந்து திருட்டுப்போயிருந்து, அப்படி திருட்டுப்போயிருக்கும் விஷயத்தை அச்சாமான்களை டெலிவரி எடுக்கு முன் ரயில்வே அதிகாரிக்குச் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்தால் ரெயில்வே நிர்வாகம் செய்யவேண்டிய ஒரு கடமை உண்டு. அதாவது அச்சந்தர்ப்பங்களில் சாமான்கள் எவ்விதம் யார் யாரால் எந்த எந்த இடங்களில் கையாளப்பட்டதென்ற முழு விவரத்தையும் சாமான்களை அனுப்பியவருக்கோ அல்லது கோர்ட்டில் வியாஜ்யம் ஏற்பட்டால் சாக்ஷிகள்மூலம் கோர்ட்டிலோ முதலில் சொல்லவேண்டும். அதிலிருந்தே ரயில்வே சிப்பந்திகளின் தவறான நடத்தையால்தான் நஷ்டம் ஏற்பட்டதென்று ஏற்பட்டால் ரயில்வே நிர்வாகம் நஷ்ட ஈடு கொடுக்க நேரிடும். அதிலிருந்து வியக்தமாய் ஏற்படாவிட்டால் ரயில்வே சிப்பந்திகளின் தவறான நடத்தையால்தான் நஷ்டம் ஏற்பட்டதென்று சாமான் அனுப்பியவர் ருஜூ செய்யவேண்டும். அப்படி ருஜூ செய்தால்தான் நஷ்ட ஈடு கொடுக்கப்படும்.

ரிஸ்க் நோட் (இஸட்) Z: மேற்கண்ட B (பி) ரிஸ்க் நோட்படி அடிக்கடி சாமான்கள் குறைந்த கட்டணத்தில் அனுப்புவோர் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக எழுதிக் கொடுக்காமல் பொதுவாக அவரால் அனுப்பப்படும் எல்லாச் சாமான்களுக்கும் இந்த ஒப்பந்தப்படி எழுதிக் கொடுக்கலாம். இதன் வாசகம் B ரிஸ்க் நோட் போலவே தான்.

ரிஸ்க் நோட் (ஸி) C: அனுப்புபவர் கோரிக்கைப்படி திறந்த வாகனில் அனுப்ப இந்த ஒப்பந்தம்.

ரிஸ்க் நோட் (டி) D: குறைந்த கட்டணத்தில் சில அபாயகரமானதும் பற்றிக் கொள்ளக் கூடியதுமான சாமான்களை அனுப்ப.

ரிஸ்க் நோட் (ஈ) E: குறைந்த கட்டணத்தில் யானை, குதிரை, ஒட்டகம், மாடு, ஆடு, நாய் இவைகளை அனுப்ப.

ரிஸ்க் நோட் (எப்) F: சாதாரண வண்டியில் குதிரை முதலியவற்றை அனுப்ப.

ரிஸ்க் நோட் (ஜீ) G: இது D ஒப்பந்தத்தின் மூலம் அடிக்கடி அனுப்ப.

ரிஸ்க் நோட் (எக்ஸ்) X: ரூ. 100-க்கு மேல் மதிப்புள்ள சில சாமான்களுக்கு அதிக கட்டணம் இல்லாமல் குறைந்த கட்டணம் கட்டி அனுப்ப.

ரிஸ்க் நோட் (ஒய்) Y: ஷை அடிக்கடி அனுப்பப்பொது ஒப்பந்தம்.

ஆறு மாதத்திற்குள் நஷ்ட ஈடு கேட்க வேண்டும்: ரயில்வே நிர்வாகத்திடம் ஒப்படைக்கபட்ட சாமான்கள் காணுமலோ, அழிந்தோ, சீர்கேடாகவோ போன காரணத்தினுல் சாமானை அனுப்பியவர் அல்லது அவற்றை அடையப் பாத்தியமுள்ளவர் ரயில்வே நிர்வாகத்தினிடம் நஷ்ட ஈடு அடைய விரும்பினுல், சாமான்கள் ரயில்வேயிடம் ஒப்படைக்கப்பட்ட தேதியிலிருந்து 6 மாதத்திற்குள் ரயில்வேயின் நிர்வாகத்திற்கு அவ்விதம் நஷ்ட ஈடு கேட்பதைத் தெரிவிக்க வேண்டும். பல ரயில்வேக்களின் மூலம் சாமான்கள் எடுத்துச் செல்லப்பட்டிருந்தால் ஒவ்வொரு ரயில்வே நிர்வாகத்திற்கும் நோட்டீஸ் கொடுக்க வேண்டும். நோட்டீசை ரிஜிஸ்டர் தபால் மூலம் அனுப்ப வேண்டும். அல்லது நேரில் கொடுக்கலாம். இவ்விதம் நஷ்ட ஈடு கோருவதை 6 மாதத்திற்குள் தெரிவிக்கா விட்டால் நஷ்ட ஈடு அடையும் பாத்தியத்தை இழக்க நேரிடும். ரயில்வே நிர்வாகம் என்பது சர்க்கார் ரயில்வேயாக இருந்தால் அதன் மானேஜர் என்றும் கம்பெனி ரயில்வேயாக இருந்தால் அதன் ஏஜண்ட் என்றும் அர்த்தம்.

சர்க்காருக்குச் சொந்தமான ரயில்வேயின் பேரில் பிராது செய்ய வியாஜ்ய நோட்டீஸ் அவசியமானது: மேற்கண்ட நஷ்ட ஈடு கோரும் நோட்டீசைத் தவிர, சர்க்கார் பேரில் எந்தத் தாவா செய்வதாக இருந்தாலும் இரண்டு மாத நோட்டீஸ் கொடுக்க வேண்டும். சர்க்காருக்குச் சொந்தமான ரயில்வே நிர்வாகத்தின் பேரில் நஷ்ட ஈடு கிடைக்க வியாஜ்யம் செய்வதற்கு முன் எழுத்து மூலம் இரண்டு மாத அவகாசம் கொடுத்து, அந்தச் சர்க்கார் ரயில்வேயின் ஜெனரல் மானேஜருக்கு (சி. பி. ஸி. 80-வது செக்ஷன்படி) ஒரு நோட்டீஸ் கொடுக்க வேண்டும். இந்த நோட்டீசில் வியாஜ்ய மூலம், வாதியின் பெயரும் விபரமும், இருப்பிடம், கேட்கும் பரிகாரம் இவைகளைக் குறிப்பிட்டிருக்க வேண்டும். பிராதிலும் இவ்விதம் நோட்டீஸ் கொடுத்திருப்பதைக் காணவேண்டும். இவ்விதம் நோட்டீஸ் கொடுக்காமல் சர்க்கார் பேரில் செய்யும் வியாஜ்யம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. சமஸ்தான ரயில்வேக்களின் பேரில் பிராது தொடரு முன் (சி. பி. ஸி. செக்ஷன் 86 படி) மத்திய சர்க்கார் அனுமதி பெற வேண்டும்.

நஷ்ட ஈடு கேட்க யாருக்கு உரிமை: ரயில்வே நிர்வாகத்திடம் ஒப்படைக்கும் சாமான்களுக்கு ரயில்வே உத்தியோகஸ்தரால் சாமான்களை அனுப்புபவருக்கு ஒரு ரசீது கொடுக்கப்படும். இதை R/R ஆர்/ஆர் என்று சொல்வதுண்டு. சாமான்களைப் பெற்றுக் கொள்பவர் பெயரும் அதில் இருக்கும். அல்லது அனுப்புபவரே தம் பெயருக்கே ரசீதை வாங்கலாம். அதில் கையெழுத்துப் போட்டு வேறு ஒருவரை டெலிவரி எடுத்துக் கொள்ளும்படி மாற்றலாம். ஆகையால் ரயில்வேயிடமிருந்து சாமான்களைத் திருப்பி வாங்க யாருக்குப் பாத்தியமோ அவருக்கு நஷ்டம் கேட்கவும் வியாஜ்யம் செய்யவும் பாத்தியம் உண்டு.

எந்த ரயில்வே நிர்வாகத்தின் பேரில் வியாஜ்யம் செய்வது? ஓரிடமிருந்து பல ரயில்வேக்கள் மூலம் சாமான்கள் எடுத்து செல்லப்பட்டால் எந்த ரயில்வேயிடம் சாமான்கள் ஒப்படைக்கப்பட்டதோ அதன் பேரிலாவது, அல்லது எந்த ரயில்வேயில் சாமான்களுக்கு நஷ்டம் அல்லது கெடுதி ஏற்பட்டதோ அந்த ரயில்வே மீதாவது நஷ்டத்திற்குத் தாவா செய்யலாம்.

பத்திரங்கள் - ஸ்டாம்பு, ரிஜிஸ்டர் கட்டணம் உள்பட

"பத்திரம்" என்பது ஒருவருக்கொருவர் சொத்துக்கள் சம்பந்தமாயும், பாத்தியதைகள் சம்பந்தமாயும் செய்துகொள்ளும் ஒப்பந்தங்களையும் சொத்து மாற்றல்களையும் சட்டத்திற்கேற்றவாறு எழுத்துமூலம் எழுதிக்கொள்ளும் "தஸ்தாவேஜு"களைக் குறிக்கும். எந்த ஒப்பந்தமும் முதலில் வாய்மொழியாகவோ அல்லது கடிதப்போக்குவரத்து மூலமாகவோ ஆரம்பமாகலாம். வித்தியாசம் உள்ள விஷயங்களைப்பற்றி பேரம் நடக்கலாம். இவை எல்லாம் முடிந்த பிறகு கடைசியில் தேவையான பத்திரங்கள் எழுதப்படும்.

பத்திரங்கள் எழுதுவது இங்கிலாந்திலும் மேனாடுகளிலும் இதில் விசேஷப் படிப்பும் பயிற்சியும் பெற்ற நிபுணர்களால்தான் கையாளப்படும் விஷயம். நம் நாட்டில் சிற்சில இடங்களிலும் சந்தர்ப்பங்களிலும் பத்திரம் எழுதுவதில் சட்ட அறிஞர்கள் கலந்துகொள்ளப்பட்டாலும் பெரும்பான்மையான பத்திரங்கள் நாடோடியாக எழுதப்பட்டு வருகின்றன. அக்காரணத்தினால் தடுத்திருக்கக் கூடிய சில விவகாரங்களும் உண்டாகின்றன.

பல வகைப்பட்ட பத்திரங்களைப்பற்றி ஒவ்வொன்றாய்க் கவனிப்பதற்கு முன் சில அடிப்படையான விதிகளை ஞாபகத்தில்

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு வருடம் கடந்தால் காலாவதி: சாமான்கள் நஷ்டமானதற்கும் அல்லது காணாமற் போய்விட்டாலும், கால தாமதமானாலும் சாமான்கள் திருப்பிக் கொடுக்கவேண்டிய காலத்திலிருந்து ஒருவருடத்திற்குள் அதன் நஷ்டத்திற்குத் தாவா செய்ய வேண்டும்.

எவ்வளவு நஷ்டஈடு கிடைக்கும்: ரயில்வேயிடம் சாமான்களை ஒப்படைப்பவருக்குச் சில கடமைகள் உண்டு. அவைகளில் முக்கியமானது அச்சாமான்கள் என்ன என்று உண்மையை எழுதிவைக்க வேண்டும். கட்டணத்தை உத்தேசித்தோ, வேறு எக் காரணத்தை உத்தேசித்தோ மூட்டை அல்லது கட்டுக்குள் இருக்கும் சாமானை மறைத்து வேறு சாமான் என்று எழுதி வைத்திருந்தால், அதனால் நஷ்டம் ஏற்பட்டால் அதை ஈடு செய்ய ரயில்வே நிர்வாகத்திற்குப் பொறுப்பு இல்லை. மேலும் உண்மை எதாக இருந்தாலும் பொய்யாக எழுதிவைத்த சாமான்கள் எதுவோ அவைகளின் விலையைதான் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டியிருந்தால் கொடுக்கப்படும்.

யாதொரு விசேஷ ஒப்பந்தமும் (ரிஸ்க் நோட்) இல்லாவிட்டால் ரயில்வேயிடம் எடுத்துச் செல்ல ஒப்படைக்கப்பட்ட சாமான்கள் (1) ஜாடா சாமான்களும் திருப்பி (டெலிவரி) கொடுக்கப்படாமற் போனாலும், (2) சாமான்கள் எண்ணிக்கையிலோ, நிறையிலோ குறைந்தாலும், (3) திருப்பிக் கொடுக்கப்படும்போது சாமான்கள் சீர்கெட்டிருந்தாலும், (4) திருப்பிக் கொடுப்பதில் அனாவசியமான தாமதம் ஏற்பட்டாலும் இவைகளினால் ஏற்படும் நஷ்டத்திற்கு ரயில்வே நஷ்ட ஈடு கொடுக்கக் கடமைப்பட்டதே. ஆனால், தெய்வாதீனத்தாலாவது, எதிர்பார்க்க முடியாத விபத்துக்களினாலாவது (உதாரணம்: உள்நாட்டுக் கலகம், யுத்தம் போன்றவை) ஏற்படும் நஷ்டத்திற்கு ரயில்வே நிர்வாகம் பொறுப்பாளி அல்ல. மேலும், ரயில்வேயின் பொறுப்பைக் குறைத்துச் சாமான்களை அனுப்புவோர் ரிஸ்க்நோட் எழுதிக் கொடுப்பதின் மூலம் விசேஷ ஒப்பந்தம் செய்துகொண்டிருந்தால் அந்தந்த ரிஸ்க் நோட்டுகளின் வாசகங்களைப் பொறுத்தே ரயில்வே நிர்வாகத்தின் பொறுப்பு நிர்ணயிக்கப்படும்.

வைத்துக் கொள்ள வேண்டும். அவை யாவன: (1) சில ஒப்பந்தங்களும்சொத்து மாற்றுதல்களும் வாய்மொழியாக இருந்தால் செல்லாது. ரிஜிஸ்டரான பத்திரங்கள் இருந்தால்தான்செல்லும். (2) சிலபத்திரங்களுக்கு சாக்ஷிகள் அவசியம்வேண்டும். தேவையான சாக்ஷிகள் இல்லாமல் ரிஜிஸ்டராகி இருந்தும் கூட பிரயோஜனப்படாமல் போய்விடும். (3) பத்திரத்தில் எழுதியிருக்கும் சில ஷரத்துக்களுக்கு மாறாக வாய் மொழி ஒப்பந்தங்களும் ஏற்பாடுகளும் செல்லாது. (4) சில முக்கிய விஷயங்களைப் பற்றி பத்திரங்களில் யாதொன்றும் சொல்லப்படாமல் இருந்தால் அச்சந்தர்ப்பங்களில் சட்டப்படிக்குள்ள சில பாத்தியங்களும் கடமைகளும் ஒப்புக் கொள்ளப்பட்டதாக பாவிக்கப்படும்.

இனி ஒவ்வொரு வகையான பத்திரங்களையும் தனித்தனியாக ஆராய்ந்து பார்ப்போம்.

கிரயப் பத்திரம்

விக்கிரயம், சுத்தக்கிரய சாசனம் என்றும் சொல்வதுண்டு. ஒரு சொத்தை விலைக்கு விற்பதற்குத் தான் 'கிரயம்' என்று சொல்வது. விலை இல்லாமல் செய்யப்படும் இனம் சாசனம், தான சாசனம், செட்டில்மெண்ட், தர்ம சாசனம், டிரஸ்டுப் பத்திரம் போன்றவைகளைப்பற்றி பின்னல் சொல்லப்படும்.

கிரயம் செய்ய பத்திரம் அவசியமா? ஸ்தாவர சொத்துக்கள்: ரூ. 100-க்குள் விலையுள்ள ஸ்தாவர சொத்துக்களை விற்பனை செய்ய யாதொரு பத்திரமும் சட்டப்படி வேண்டியதில்லை. வாய் மொழியாகவே விற்கலாம். ஆனல், விற்கப்படும் சொத்தை உடனேயே வாங்குபவரிடம் சுவாதீனம் கொடுத்து விட வேண்டும். ஆனல் கிரயப் பத்திரம் எழுதி ரிஜிஸ்டர் செய்வதின் மூலமும் விற்பனை செய்யலாம். பத்திரம் எழுதப்பட்டால் அது ரிஜிஸ்ட்டராக வேண்டும். ரூ. 100-ம் அதற்கு மேலும் விலையுள்ள ஸ்தாவர சொத்துக்களை விற்பனை செய்ய வேண்டுமானல் அதற்காக கிரயப் பத்திரம் எழுதி ரிஜிஸ்டர் செய்ய வேண்டும். சுவாதீனம் கொடுக்க முடியாத பாத்தியங்களை விற்பனை செய்ய அவைகளின் விலை எவ்வளவாக இருந்த போதிலும் (ரூ. 100-க்கு குறைவாக இருந்த போதிலும்) ரிஜிஸ்டரான பத்திரங்கள் மூலம் தான் விற்பனை செய்ய வேண்டும்.

ஜங்கம சொத்துக்கள்: ஜங்கம சொத்துக்கள் எவ்வளவு அதிக விலையுள்ளவையாக இருந்த போதிலும் அவைகளை விற்கவும் வாங்கவும் யாதொரு பத்திரமும் தேவையில்லை. வாய் மொழியாகவே தினந்தோறும் எவ்வளவோ விலை உயர்ந்த ஜங்கம சொத்துக்கள் விற்பனை ஆகின்றன. ஜங்கம சொத்தை விற்பவர் அதன் விலையை வாங்கிக் கொண்டு வாங்குபவரிடம் சாமானைக்கொடுத்தால் போதும். ஆனல் சில சமயங்களில் இது விஷயமாய் எக்ரிமெண்ட் என்று வழங்கும் உடன்படிக்கை அல்லது ஒப்பந்தங்களை எழுத்து மூலம் செய்து கொள்வதுமுண்டு. ஸ்தாவர சொத்தைப் பொருத்து கிரயப் பத்திரம் எழுதுவது போல் ஜங்கம சொத்துக்களுக்கும் கிரயப் பத்திரம் எழுதலாம். அப்படி எழுதினல் அதற்கு ஸ்தாவர சொத்திற்கு எப்படியோ அப்படியே தான் ஸ்டாம்பு வேண்டும். அக்காரணத்தால் அதிகமாக இவ்விதம் ஜங்கம சொத்துக்களைப் பொருத்து கிரயப் பத்திரங்கள் ஏற்படுவதில்லை. குறைந்த ஸ்டாம்பில் எக்ரிமெண்ட் மட்டில் எழுதிக் கொள்ளலாம். ஜங்கம சொத்துக்களை வருங்காலத்தில் விற்பனை செய்வதற்காக ஷரத்துக்கள் கண்டு எக்ரிமெண்ட் எழுதிக் கொள்ளலாம். அல்லது ஏற்கனவே பத்திரமில்லாமல் விற்கப்பட்ட ஜங்கம சொத்துக்களின் விலை பாக்கி முதலியவைகளைக் குறித்தும் உடன்படிக்கை செய்து கொள்ளலாம். இவ்விதம் செய்யும் எக்ரிமெண்ட்டுகள் மூலம் ஜங்கம சொத்தின் பாத்தியம் மாற்றப்படாது. அதாவது ஏற்கனவே பாத்தியம் மாற்றப்பட்டதாகவாவது அல்லது இனி பாத்தியம் மாற்ற வேண்டுமென்றாவது தான் இருக்கும். எக்ரிமெண்ட் மூலமாகவே ஜங்கம சொத்தின் பாத்தியம் மாற்றப்பட்டால் அது சாசனமாகக் கருதப்பட்டு அதிக ஸ்டாம்பு கொடுக்கும்படி ஏற்படும். எக்ரிமெண்ட்டுக்கு ஸ்டாம்பு ரூ. 1—8—0.

சாக்ஷிகள்: கிரய சாசனங்களுக்கு சாக்ஷிகள் போடவேண்டுமென்று கட்டாயமில்லை. (பெந்தகம் ஒத்தி முதலிய சில பத்திரங்களுக்கு இரண்டு சாக்ஷிகளாவது இல்லாவிட்டால் பத்திரமே செல்லாது. கிரய சாசனத்திற்கு அப்படி அல்ல.)

கிரயப் பத்திரத்திற்கு ஸ்டாம்பு: ஒவ்வொரு கிரயப் பத்திரத்திற்கும் இந்தியன் ஸ்டாம்பு ஆக்ட்படி ஒரு ஸ்டாம்பு விகிதமும் சர்சார்ஜ் என்ற அதிக கட்டணத்திற்கு ஒரு ஸ்டாம்பு விகிதமும் இருக்கின்றது. பொதுவாக ரூ. 100-க்கு இப்பொழுது ஸ்டாம்பு ரூ. 3/- விற்கப்படும் ஸ்தாவர சொத்து முனிசிபல் டவுன் எல்லைக்குள் இருந்தால் அதற்கு ரூ. 100-க்கு சர்சார்ஜ் ரூ. 5/- ஆக ரூ. 100-க்கு ரூ. 8-க்கு ஸ்டாம்பு வேண்டும். முனிசிபல் எல்லைக்கு வெளியில் இருந்தால் ரூ. 100-க்கு சர்சார்ஜ் ரூ. 4 ஆக ரூ. 100-க்கு ரூ. 7 ஸ்டாம்பு வேண்டும். ஆனல் இவை கீழே கண்டபடி தனித்தனியாக கணக்குச் செய்யப்பட வேண்டும்.

சர்சார்ஜ் இல்லாமல் ஸ்டாம்பு கட்டண விகிதம்:

சாசனத்தில் கண்டிருக்கும் கிரயம்	ஸ்டாம்பு ரூ. அ. பை
ரூ. 50-க்கு மேற்படாமலிருந்தால்	1—8—0
ரூ. 50-க்கு மேல் ரூ. 100-க்கு மேற்படாமலிருந்தால்	3—0—0
ரூ. 100 ,, ரூ. 200 ,,	6—0—0
ரூ. 200 ,, ரூ. 300 ,,	9—0—0
ரூ. 400 ,, ரூ. 500 ,,	15—0—0
ரூ. 500 ,, ரூ. 600 ,,	18—0—0
ரூ. 600 ,, ரூ. 700 ,,	21—0—0
ரூ. 700 ,, ரூ. 800 ,,	24—0—0
ரூ. 800 ,, ரூ. 900 ,,	27—0—0
ரூ. 900 ,, ரூ. 1000 ,,	30—0—0
ரூ. 1000-க்கு மேற்பட்ட ஒவ்வொரு ரூ. 500-க்கும், அதன் பாகத்திற்கும் அதிகப்படியாக	ரூ. 15—0—0

இவ்விதம் கணக்கு செய்து கிரய சொத்து முனிசிபல் எல்லைக்குள் இருந்தால் கிரயத்தொகை ரூ. 100-க்கு ரூ. 5-விதம் கூட்டிக்கொண்டும் மற்ற இடங்களில் இருந்தால் ரூ. 100-க்கு ரூ. 4 விதம் கூட்டிக்கொண்டும் ஜெனரல் ஸ்டாம்பு வேண்டும். ஸ்டாம்பும், சர்சார்ஜும் தனித்தனியாக கணக்கு செய்யவேண்டும்.

ரிஜிஸ்டர் கட்டணம்: சாசனத் தொகையைப் பொருத்து ரிஜிஸ்டர் கட்டணம் செலுத்த வேண்டும்.

சாசனத்தொகை	ரிஜிஸ்டர் கட்டணம் ரூ. அ. பை
ரூ. 1 முதல் ரூ. 10 உள்பட	0—6—0
ரூ. 11 ,, ரூ. 25 ,,	0—9—0
ரூ. 26 ,, ரூ. 50 ,,	0-12—0
ரூ. 51 ,, ரூ. 75 ,,	1—2—0
ரூ. 76 ,, ரூ. 100 ,,	1—8—0
ரூ. 101 ,, ரூ. 200 ,,	2—4—0
ரூ. 201 ,, ரூ. 300 ,,	3—0—0
ரூ. 301 ,, ரூ. 400 ,,	3-12—0
ரூ. 401 ,, ரூ. 500 ,,	4—8—0
ரூ. 501 ,, ரூ. 600 ,,	5—4—0
ரூ. 601 ,, ரூ. 750 ,,	6—0—0
ரூ. 751 ,, ரூ. 1000 ,,	7—8—0
ரூ. 1001 ,, ரூ. 1500 ,,	9—0—0
ரூ. 1501 ,, ரூ. 2000 ,,	10—8—0
ரூ. 2001 ,, ரூ. 2500 ,,	12—0—0
ரூ. 2501 ,, ரூ. 3000 ,,	14—0—0
ரூ. 3001 ,, ரூ. 3500 ,,	16—0—0
ரூ. 3501 ,, ரூ. 4000 ,,	18—0—0
ரூ. 4001 ,, ரூ. 5000 ,,	20—0—0

ரூ. 5000-க்கு மேல் இருந்தால் ரூ. 5000-க்குள்ள ரூ. 20—0—0-ம் மேற்கொண்டிருக்கும் ஒவ்வொரு ரூ. 1000-க்கும் ரூ. 4—0—0 விதமும் ரிஜிஸ்டர் கட்டணம் கட்டவேண்டும்.

அடுத்து வரும் இதழ்களிலும் இப்பகுதி தொடர்ந்து வரும். அடுத்த இதழில்: பெந்தகம், ஒத்தி, குத்தகை முதலியவை பற்றி எழுதப்படும்.

கண்ட்ரோல்-லைசென்ஸ்-ரேஷன்-விலை நிர்ணயம்

இதர சர்க்கார் அறிக்கைகள்

ஜீனி

ஜீனி மூட்டைகளை 'டெலிவரி' எடுக்க பர்மிட் வேண்டும்: சென்னை மாகாணத்திலுள்ள எந்த ரயில்வே ஸ்டேஷன் அல்லது துறைமுகத்திலிருந்தும் ஜீனி மூட்டைகளை எடுத்துக் கொள்ள அந்த ஜில்லா கலெக்டர் அல்லது சிவில் சப்ளைஸ் கமிஷனர் அல்லது இதற்காக அவரால் நியமிக்கப்படும் உத்தியோகஸ்தரிடமிருந்து அனுமதிச் சீட்டு (பர்மிட்) வேண்டும். விற்பதற்கும் பர்மிட் வேண்டும். பர்மிட்டில் ஜீனி எப்படி விநியோகிக்கப்படுத்த வேண்டுமென்று கண்டிருக்கிறதோ அதன்படி தான் விநியோகிக்க வேண்டும். பர்மிட்டை வேறு ஒருவருக்கும் மாற்றக்கூடாது.

ஜீனியின் விலை நிர்ணயம்: ஜில்லா கலெக்டரால் அவ்வப்பொழுது நிர்ணயிக்கப்படும் விலைக்கு மேல் எந்த மொத்த வியாபாரியும் சில்லறை வியாபாரியும் ஜீனி விற்கக் கூடாது. ஒவ்வொரு ஜீனி வியாபாரியும் ஜீனி வாங்குபவருக்கு ரசீது கொடுக்க வேண்டும். அதில் விற்பனைத் தேதி, எவ்வளவு கொடுக்கப்பட்டது, விலை, வாங்குபவர் பெயர் இவைகளைக்காண வேண்டும். அதற்கு நகல் வைத்திருக்க வேண்டும். இவைகளை கலெக்டராவது அவரிடம் அதிகாரம் பெற்ற உத்தியோகஸ்தராவது பார்வையிடலாம். ஒவ்வொரு வியாபாரியும் கடையில் பார்வையுள்ள இடத்தில் கையிருப்பு ஜீனி எவ்வளவு என்றும் கலெக்டரால் நிர்ணயிக்கப்பட்ட விலை எவ்வளவு என்றும் விளம்பரப்படுத்தி இருக்க வேண்டும். ஒரு இம்பீரியல் மணங்குக்கு மேல் ஒரு தடவையில் செய்யும் வியாபாரத்திற்கு 'மொத்த விலை' ஒரு மணங்குக்குட்பட்ட வியாபாரத்திற்கு 'சில்லறை விலை'.

(13—9—49 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் II பக்கம் 874)

சென்னை ஜீனி வியாபாரிகள்
லைசென்ஸ் உத்திரவு (1949)

சென்னை மாகாணத்தில் ஜீனி வியாபாரத்தை ஒழுங்குபடுத்துவதற்காக ஒருகட்டுப்பாடுஉத்திரவு பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. 13—9—1949 தேதி முதல் அமுலுக்கு வந்து விட்டது. அந்தத் தேதியிலிருந்து ஜீனியில் மொத்த வியாபாரம் செய்ய லைசென்சு வாங்கிக் கொள்ள வேண்டும். "மொத்த வியாபாரி" என்பது வேறு ஒரு வியாபாரிக்கு விற்பனை செய்வதற்காக ஜீனி வாங்குபவரை மட்டில் குறிக்கும். (சில்லறை வியாபாரிகளுக்கு இந்த லைசென்சு வேண்டியதில்லை.) மொத்த வியாபாரிகள் லைசென்சு இல்லாமல் வியாபாரம் செய்யக் கூடாது. லைசென்சு பெற சென்னை சிவில் சப்ளைஸ் கமிஷனர் அல்லது அந்த ஜில்லா கமர்சியல் டாக்ஸ் ஆபீசர் அல்லது சிவில் சப்ளைஸ் கமிஷனரால் இதற்கு நியமிக்கப்படும் உத்தியோகஸ்தரிடம் மனு செய்து கொள்ள வேண்டும். நமூனா I படி மனு இருக்க வேண்டும். 2—9—1949-க்கு முன் ஜீனி மொத்த வியாபாரத்தில் ஈடுபடாதவருக்கு லைசென்சு கிடைக்காது. (கோவாபரேடிவ் சங்கங்களுக்கு இந்த விதி கிடையாது.) மேலும் ஜீனி வியாபாரத்தில் கொள்ளை லாபம் அடித்தவர், பதுக்கியவர், விற்க மறுத்தவர் என்று லைசென்சு கொடுக்கும் அதிகாரிக்குத் தோன்றினாலும் வேறு காரணங்கள் இருந்தாலும் அவருக்கு லைசென்சு கொடுக்க மறுக்கலாம். லைசென்சு பெற்றவர்கள் நடந்து கொள்ள வேண்டிய முறை லைசென்சு நமூனாவில் கொடுக்கப் பட்டிருக்கிறது. லைசென்சில் கண்ட ஷரத்துக்களை மீறுவது குற்றமாவதுடன் அதற்காக லைசென்சும் ரத்து செய்யப்படலாம். இந்த உத்திரவுக்கு மாறாக ஒரு வியாபாரி நடந்துகொள்வதாக சந்தேகம் ஏற்பட்டால் ரெவின்யூ இன்ஸ்பெக்டர் அந்தஸ்துக்கு கீழ் இல்லாத

எந்த ரெவின்யூ அதிகாரியும் இடத்தைப் பரிசோதனை செய்ய அதிகாரமுண்டு.

ஜீனி லைசென்சுக்கு மனு நமூனு I

1. மனுதார் பெயர்.
2. மனுதார் வியாபாரம் செய்யுமிடம்
3. மனுதார் எவ்வளவு காலம் ஜீனி வியாபாரம் செய்திருக்கிறார்.
4. அடியில் கண்ட வருடங்களில் செய்யப்பட்ட வியாபாரம் (2 அந்தர் மூட்டைகளில் சொல்லவேண்டும்)

1946, 1947, 1948, 1949-ஜனவரி முதல் ஜூன் முடிய.

இன்று என்னிடம் கீழ்க்கண்ட இடங்களில் அதற்கு நேரே குறிப்பிடப்பட்ட அளவு ஜீனி இருக்கிறது.

இடம். 2 அந்தர் மூட்டைகள்.

1949-ஆம் வருட ஜீனி வியாபாரிகள் லைசென்சு உத்திரவில் நமூனு II லைசென்சின் ஷரத்துக்களை கவனமாய் படித்தேன் அதன்படி நடக்க ஒப்புக்கொள்கிறேன்.

மனுதார் கையெழுத்து

நமூனு II லைசென்சில் கண்ட முக்கிய ஷரத்துக்கள்: ஒவ்வொரு இடத்திற்கும் தனித்தனி லைசென்சு வாங்கிக்கொள்ளவேண்டும். தனித்தனி கணக்குகள் வைத்துக்கொள்ள வேண்டும். லைசென்சில் குறிப்பிடப்பட்டிருக்கும் இடத்தைத் தவிர வேறு இடத்தில் ஜீனியை வைத்திருக்கக்கூடாது. (லைசென்ஸ் கொடுப்பவர் அனுமதி இருந்தால் வைக்கலாம்) தினசரி கையிருப்பு, கொள்முதல், விற்பனை பாக்கி இவைகளை காண்பிக்கும் கணக்கு வைத்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு மாதம் 3-ம் தேதிக்குள் ஜில்லா கலெக்டருக்கும் லைசென்சு கொடுத்த அதிகாரிக்கும் ரிடர்ன் அனுப்ப வேண்டும். வியாபார ஸ்தலத்தில் பார்வையான இடத்தில் ஆங்கிலத்தில் அல்லது அந்த ஜில்லாவின் பாஷையில் அடியில் கண்ட விபரத்தை எழுதி வைத்திருக்க வேண்டும். அதாவது (1) எந்த ஊர் ஜீனி (2) தினுசு (3) ஒரு மணுவின் தொழிற்சாலை வாசல் விலை (4) ஒரு மணுவுக்கு ரயில் அல்லது லாரி அல்லது வண்டிச் சத்தம் (5) சில்லரை சிலவு (6) ஒரு மணு விற்கும் விலை (7) தேதி இவைகளை காண வேண்டும். ஜீனி வாங்குபவருக்கு விவரம் கண்டு ரசீது கொடுக்க வேண்டும். அதற்கு நகல் வைத்திருக்க வேண்டும். அதிகாரிகள் சோதனை செய்வதில் உதவிசெய்யவேண்டும். பரீட்சை செய்யமாதிரிஜீனிகேட்டால்கொடுக்கவேண்டும். கமிஷனர், ஜில்லா கலெக்டர், ஸி.டி.ஓ. கமிஷனரிடம் இதற்காக அதிகாரம் பெற்ற உத்தியோகஸ்தர் இவர்கள் ஜீனி வியாபார சம்பந்தமாய்ச் செய்யும் உத்திரவுப்படி நடக்க வேண்டும். மாதாந்திர ரிடர்னும் நமூனு III-ன் படி இருக்க வேண்டும்.

(13—9—1949 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் II ரூல் சப்ளிமெண்ட் பக்கம் 156)

ரேஷன்

கைக்குழந்தைகளுக்கும் ஒரு யூனிட் ரேஷன்: சென்னை ரேஷனிங் ரெகுலேஷன்களில் 12 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 2 யூனிட்டும் 2 வயதுக்கு மேல் 12 வயதுக்குள் இருப்பவர்களுக்கு ஒரு யூனிட்டும் என்று இருந்த ரேஷன் அளவை மாற்றி "12 வயது பூர்த்தியானவருக்கு 2 யூனிட்டும் 12 வயது பூர்த்தி ஆகாதவருக்கு 1 யூனிட்டும் ரேஷன் உண்டு" என்று மாற்றப்பட்டிருக்கின்றது.

(13—9—1949 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் II ரூல் சப்ளிமெண்ட் பக்கம் 155)

மோட்டார் வண்டிகள்

1947-ஆம் வருடத்திய (ராணுவ சம்பந்தமல்லாத) மோட்டார் வண்டிகள் கட்டுப்பாடு சட்டம் 31—12—1949 வரை அமுல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது. (இது ஏற்கனவே செய்யப்பட்ட குற்றங்களையும் இது வரை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கும் நடவடிக்கைகளையும் பாதிக்காது.) ஆனால் கட்டுப்பாட்டின்படி ஷெவர்லேட் கார் வாங்கியிருப்பவர்கள், கண்ட்ரோலருடைய உத்திரவு அன்னியில் அவைகளை விற்கவும் வேறு வகையில் விநியோகம் செய்யவும் கூடாது.

(13—9—49 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் II பக்கம் 874)

ஷாப் சட்டம்

கடைகள், ஹோட்டல்கள், முதலிய எல்லா ஸ்தாபனங்களிலும் சில ஷாப் சட்ட விதிகள் விளம்பரப்படுத்தி இருக்கவேண்டும்: ஷாப் சட்ட விதி 16 (5) யின் படி ஒவ்வொரு கடை ஹோட்டல் முதலிய எல்லா ஸ்தாபனத்திலும் ஷாப் சட்டத்திலிருந்தும் ஷாப் சட்ட ரூல்களிலிருந்தும் சில விதிகளைப் பொருக்கி, அவைகளை ஆங்கிலத்திலும் பிரதேச பாஷையிலும் யாவருக்கும் தெரியும் விதம் விளம்பரப் படுத்தும்படி மாகாண சர்க்கார் கட்டளையிடலாம். அதை அனுசரித்து இப்பொழுது என்ன என்ன விதிகளை அப்படி ஆங்கிலத்திலும் பிரதேச பாஷையிலும் விளம்பரப்படுத்த வேண்டுமென்று சர்க்கார் குறிப்பிட்டிருக்கின்றனர்.

ஷாப் சட்ட செக்ஷன்கள்: 7 முதல் 11; 13 முதல் 22; 25; 26; 29 முதல் 41; 45; 46; 50; 51.

ஷாப் சட்ட விதிகள்: 5 முதல் 13, 16, 18.

இந்த செக்ஷன்களையும் ரூல்களையும் ஆங்கிலத்திலும் பிரதேச பாஷையிலும் அச்சடித்து ஒவ்வொரு கடை, ஹோட்டல் முதலிய எவ்வித ஸ்தாபனத்திலும் நோட்டீஸ் ஒட்டப்படவேண்டும்.

(*30—8—1949* சென்னை சர்க்கார் கெஜட்-பாகம் I பக்கம் *1386*)

இரவில் திறந்திருக்கும் மருந்துக் கடைகள்: இரவு நேரங்களில் திறந்து வைத்திருக்கும் மருந்துக் கடைகளில் (டிஸ்பென்ஸரிகளில்) இரவு நேரங்களில் வேலைக்காக அமர்த்திக் கொள்ளப்பட்டிருக்கும் சிப்பந்திகள் சம்பந்தப்பட்டவரையில் ஷாப் சட்டத்தின் 9வது செக்ஷன் இனி அனுஷ்டிக்கப்படமாட்டாது. (ஷாப் சட்டம் 9-வது செக்ஷன்படி தினசரி 8 மணிக்கும் ஒரு வாரத்தில் 48 மணிக்கும் மேல் சாதாரண வேலை நேரம் இருக்கக்கூடாதென்றும், ஓவர்டயம் என்ற அதிகநேர வேலைநேரம் இரண்டுமணி நேரத்திற்குமேல் போகக்கூடாதென்றும் அதற்கு இரட்டிப்புசம்பளம் கொடுக்கவேண்டுமென்றும் ஒவ்வொரு நாலுமணி நேர வேலைக்குப் பிறகும் இடைவேளை குறைந்தது ஒரு மணி இருக்க வேண்டுமென்றும் இருப்பது இரவு நேரத்தில் திறந்துவைக்கப்பட்டிருக்கும் மருந்து கடைகளுக்கு கிடையாது.)

சோடா கடைகள் வாரத்தில் ஒருநாள் மூட வேண்டியதில்லை: சோடா கலர் இவைகளை மட்டில் விசேஷமாய் விற்பனைசெய்யும் கடைகள் இனி வாரத்தில் ஒருநாள் மூடப் படவேண்டியதில்லை. (ஆனால் அதில் வேலை செய்யும் சிப்பந்திக்கு வாரம் ஒரு நாள் விடுமுறை உண்டு.)

கல்வி ஸ்தாபனங்களுக்கும் ஹாஸ்டல்களுக்கும் ஷாப் சட்டமே கிடையாது: கல்வி சம்பந்தமான விஷயங்களில் முக்கியமாய் ஈடுபடும் ஸ்தாபனங்களுக்கும் அவைகளைச் சேர்ந்த (ஹாஸ்டல்கள்) சாப்பாட்டு விடுதிகளுக்கும் ஷாப் சட்டம் கிடையாது.

(6-9-1949 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் I பக்கம் 1427)

புதுக்கோட்டைக்கு ஷாப் சட்ட விஸ்தரிப்பு:

புதுக்கோட்டை முனிசிபாலிடியிலும் மாகாண சர்க்காரால் மேஜர் பஞ்சாயத்தென்று குறிப்பிடப்படும் இடங்களிலும் ஷாப் சட்டம் 1—9—1949 முதல் அமுலுக்கு வந்துவிட்டது.

(30-8-1949 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் I பக்கம் 1408)

வகாலத்துநாமாக்களையும் பிரமாணப் பத்திரிகைகளையும் வேறு வக்கீலே ரிஜிஸ்டர் செய்யலாம்: கக்ஷிக்காரர்களால் வக்கீல் நியமனம் செய்து அதற்காக கொடுக்கப்படும் வகாலத்துநாமாக்களையும் பிரமாணப் பத்திரிகைகளையும் இனி வேறு ஒரு வக்கீல் முன் கக்ஷிக்காரர் கையெழுத்துப் போட்டு அவருடைய அத்தாட்சி (ரிஜிஸ்டர் செய்தால்) பெற்றால் போதும்.

(16-8-1949 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் II ரூல் சப்ளிமெண்ட் பக்கம் 146)

பருத்தி

1949-ஆம் வருடத்திய சென்னை பருத்தி கண்ட்ரோல் உத்திரவும், 1949-ஆம் வருஷத்திய சென்னை பருத்தி லைசென்சு உத்திரவும் ரத்து செய்யப்பட்டு விட்டன. ஆனால் மேற்கண்ட உத்திரவுகளை ஏற்கனவே

மீறியதற்காக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகளும், இனி எடுக்கக்கூடும் நடவடிக்கைகளும் பாதிக்கப்படமாட்டாது.

(20—9—49 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் II பக்கம் 882)

ஜவுளி-நூல்

ஜவுளி வியாபாரிகள் கண்ட்ரோல் உத்திரவில் திருத்தங்கள்: 1948-ம் வருடத்திய ஜவுளி வியாபாரிகள் கண்ட்ரோல் உத்திரவில், வியாபாரிகள் மொத்த வியாபாரிகள் என்றும் சில்லரை வியாபாரிகள் என்றும் இருவகையாகப் பிரிக்கப்பட்டிருகின்றனர். இப்பொழுது ஜவுளி வியாபாரிகளை மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அதாவது (1) மொத்த வியாபாரி, (2) சில்லரை வியாபாரி, (3) மொத்த வியாபாரமும், சில்லரை வியாபாரமும் சேர்த்து செய்யும் வியாபாரி என்று 3 வகையாக பிரிக்கப் பட்டிருக்கின்றனர். அதாவது ஒருவரே தன் இஷ்டப்படி மொத்த வியாபாரமும் சில்லரை வியாபாரமும் சேர்ந்து செய்பவர் ஒரு தனிவகையாக பாவிக்கப்படுவார். மொத்த வியாபாரமும் சில்லரை வியாபாரமும் சேர்த்து செய்யும் வியாபாரி அரை வருடத்திற்கு ரூ. 137—8—0 லைசென்சு கட்டணம் கட்டவேண்டும். மொத்த வியாபாரம் மட்டில் செய்பவர் இனி ரூ. 5000க்குப் பதிலாக ரூ. 2000 டிபாசிட் கட்டினால் போதும், மொத்த வியாபாரமும் சில்லரை வியாபாரமும் சேர்ந்து செய்பவர் டிபாசிட் ரூ. 500 கட்டவேண்டும். (பாகிஸ்தானிலிருந்து வந்த அகதிகள் இந்த டிபாசிட் கட்ட வேண்டியதில்லை) இந்த திருத்த உத்திரவு 30—7—1949 முதல் அமுலுக்கு வந்ததாக பாவிக்கப்படும்.

(20—9—1949 சென்னை சர்க்கார் கெஜட்-பாகம் II ரூல் சப்ளிமெண்ட் பக்கம் 159)

நூல் வியாபாரத்திற்கும் டிபாசிட் குறைக்கப்பட்டிருக்கிறது: 1948ம் வருடத்திய சென்னை நூல் வியாபாரிகள் உத்திரவு இதற்காக மாற்றப்பட்டிருக்கிறது. இனி நூலில் மொத்த வியாபாரம் செய்பவர் ரூ. 5000க்கு பதிலாக ரூ. 2000க்கு டிபாசிட் கட்டினால் போதும்.

(20—9—49 சென்னை சர்க்கார் கெஜட்-பாகம் II ரூல் சப்ளிமெண்ட் பக்கம் 160)

ஜவுளி வியாபாரிகள் இனி ஜவுளி வாங்குபவருக்கு விவரமான ரசீது கொடுக்கவேண்டியதில்லை: ஜவுளி வியாபாரிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் லைசென்சில் 9வது நிபந்தனை ரத்து செய்யப்பட்டுவிட்டது. (இது ஜவுளி வியாபாரிகள் ஜவுளி வாங்குபவருக்கு விவரமாய் கொடுக்கவேண்டிய ரசீதைப் பற்றி)

20—9—1949 சென்னை சர்க்கார் கெஜட்-பாகம் II ரூல் சப்ளிமெண்ட் பக்கம் 160)

வக்கீல்: (சாக்ஷியைப் பார்த்து) பிரதிவாதி தனியே இருக்கும்போது அவர் குடிக்கும் வழக்கம் உண்டா?

சாக்ஷி: நான் எப்படிச் சொல்றதுங்க. அவுங்க தனியே இருந்தபோது நான் அவுங்களோடே இருந்தது கிடையாதுங்களே!

நீதிபதி: கைதியே! நான் உன்னை மறுபடியும் என்முன் வரக்கூடாதென்று எச்சரிக்கை செய்தேனே இல்லையோ?

கைதி: ஆமாங்க எசமான்! நான் வரவே மாட்டேன்னு பிடிவாதமாச் சொல்லிட்டேன். இந்த இன்சுபெட்டர் அய்யா என்னை விடமாட்டேன்னு பிடிச்சு இங்கே இளுத்துகிட்டு வந்துட்டாங்க

கேள்வியும்-பதிலும்

இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில்தான் கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விகள் சுருக்கமாய் இருக்கவேண்டும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் அபிப்பிராயமே.

கேள்வி: (L 1403 — ராமனுதன் செட்டியார், தேவகோட்டை) நகைகள் ஈடுபிடிப்பதற்கு லைசென்ஸ் உண்டா? லைசென்ஸ் உண்டென்ருல் எந்தெந்த ஜில்லாவுக்கு?

பதில்: ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுப்பதை தொழிலாக நடத்துபவர்கள் சென்னை "பான் புரோகர்ஸ் ஆக்ட்" என்ற சட்டப்படி லைசென்ஸ் வாங்கிக்கொண்டுதான் அத்தொழில் நடத்தவேண்டும். இப்போது அச்சட்டம் சென்னை மாகாணத்திலுள்ள எல்லா ஜில்லாக்களிலும் அமுலில் இருக்கிறது.

(5-8-1949 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் I)

கேள்வி: (L 1418 - மயில்சாமி) ஒரு வீடு ரூ. 30-க்குள் வாடகைக்கு விடப்பட்டிருந்தது. தற்சமயம் காலியாக இருக்கிறது. ஷை வீடு காலியானதை அதிகாரிக்கு தெரியப்படுத்தவேண்டியதில்லை. ஆனுல் அதே வீடு ரூ. 30-க்குமேல் வாடகைக்கு கொடுத்தால் வேகன்சி ரிப்போர்ட்டோ வேறு ஏதாவது நோட்டீசோ வீட்டு வாடகை அதிகாரிக்கு தெரியப்படுத்த வேண்டுமா?

பதில்: வீடு காலியான காலத்தில் அதற்கு ரூ. 30-க்குள் வாடகை இருந்தபடியால் வேகன்சி ரிபோர்ட் செய்யவேண்டியதில்லை. வாடகை ரூ. 30-க்குமேல் போன பிறகு மறுபடியும் காலியானுல் அதிகாரிக்கு சட்டப்படி தெரிவிக்கவேண்டும்.

கேள்வி: (L 1438 - கிராம விவசாயத் தோழிலாளர் சங்கம்-கோவிந்தப்பாளையம்) கிராம விவசாயி ஒருவர் தன்னுடைய நெல் அறுவடை செய்வதற்கு முன்பு அதிகாரிகளுக்குத் தெரிவிக்கவேண்டுமா? அருவடை செய்தபிறகு தெரியப்படுத்தவேண்டுமா? நெல்லை களத்திலிருந்து வீட்டுக்கு கொண்டு போய்விடலாமா?

பதில்: ரேஷன் உத்திரவு அமுலில் இருக்கும் இடங்களில் உள்ள நிலங்களில் அறுவடை செய்வதற்கு ஒரு வாரம் முன்பு அறுவடை செய்யப்போகும் தேதியைக் குறித்து ரேஷனிங் ஆபீசருக்கு எழுத்து மூலம் நோட்டீஸ் கொடுக்கவேண்டும். அறுவடை செய்த பிறகு எவ்வளவு கண்டதென்று கணக்கும் கொடுக்கவேண்டும். ரேஷனிங் ஆபீசர் உத்திரவு இல்லாமல் நெல்லை அகற்ற முடியாது. திடீரென்று மழை பெய்யும்போல் இருந்து அல்லது அதைப்போல் வேறு காரணங்களிருந்தால் மட்டில் நோட்டீஸ் இல்லாமல் அறுவடை செய்து உடனே ரேஷனிங் ஆபீசருக்கு கணக்கு அனுப்பவேண்டும். ரேஷன் உத்திரவு அமுலில் இல்லாத இடங்களில் மேற்கண்டபடி செய்வது தேவையில்லை.

கேள்வி: (L 1473 - ராமச்சந்திரய்யர்) திருச்சங்கோடு) முதல் மனைவி இருக்கும்போது ஒருவர் இரண்டாவது விவாகம் செய்துகொண்டால் முதல் மனைவி இது விஷயமாய் நடவடிக்கை எடுத்துக்கொள்ளா

மலிருக்கும்பொழுது பொது ஜனங்கள் அதைப்பற்றி நடவடிக்கை எடுத்து நடத்தலாமா? அதற்கு கவர்ன்மெண்டார் எவ்வித உதவி செய்வார்கள்?

பதில்: பொதுஜனங்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியாது. இரண்டாவது விவாகத்தால் பாதிக்கப்பட்டவர்தான் கோர்ட்டில் பிராது (கம்பிளெயிண்ட்) கொடுக்கலாம் என்று கிரிமினல் புரொஸீஜர் கோடு செக்ஷன் 198-ல் இருக்கின்றது. 'பாதிக்கப்பட்டவர்' என்பது முதல் மனைவியைக் குறிக்கின்றது. பிராது கொடுக்க வேண்டியவர் கோஷாவாக இருந்தாலும், 18 வயதுக்குட்பட்டவராக இருந்தாலும், மேதகன் அல்லது பைத்தியமாக இருந்தாலும், வியாதி காரணமாய் பிராது கொடுக்க முடியாமலிருந்தாலும் அவருக்குப் பதிலாக கோர்ட்டின் அனுமதிபெற்று வேறு ஒருவர் பிராது கொடுக்கலாம். கவர்ன்மெண்டார் கேசை நடத்த முன்வர மாட்டார்கள்.

கேள்வி: (L 1490 - மீனாக்ஷிசுந்திரம் தேவகோட்டை) ஒரு கம்பெனியில் சிப்பந்திக்கு காஷுவல் லீவு 15 நாள், பிரிவிலேஜ் லீவு 15 நாள் என்று இருந்ததை ஷாப் சட்டப்பிரகாரம் குறைக்கலாமா? அப்படி குறைக்கக்கூடாதென்றால் எந்த அதிகாரியிடம் ரிப்போர்ட் செய்யவேண்டியது?

பதில்: ஷாப் சட்டம் அமுலுக்கு வந்த தேதிக்குமுன் ஷாப் சட்டத்தில் இருப்பதை விட ஒரு ஸ்தாபனத்தில் சிப்பந்திகளுக்கு அதிக சலுகைகள் ஏற்பட்டிருந்தால் அதை ஷாப் சட்டம் பாதிக்காது. கமிஷனர் ஆப் லேபர் என்ற அதிகாரிக்கு மனு செய்து கொள்ளவேண்டும்.

(ஷாப் சட்டம் செக்ஷன் 50, 51)

கேள்வி: (L 1494 சுல்தான், சென்னை) ரேஷன் அமுலில் இருக்கும் இடங்களில் ஒருவர் ஜாகை மாற்றினால் அது விபரத்தை ரேஷன் ஆபீசில் நேரில் தெரிவிக்க வேண்டுமா? தெரிவிக்காவிட்டால் குற்றமா? தபால் மூலம் தெரிவித்தால் போதுமா?

பதில்: ஜாகை மாற்றி 10 தினங்களுக்குள் அதற்காக இருக்கும் நமூனாப்படி எழுத்து மூலம் புது ஜாகை இருக்கும் இடத்திற்குரிய ரேஷனிங் ஆபீசர் அல்லது அஸிஸ்டெண்ட் ரேஷனிங் ஆபீசருக்கு தெரிவிக்கவேண்டும். தெரிவிக்காவிட்டால் குற்றமாகும். நமூனாப்படி எழுதி தபால் மூலம் தெரிவிப்பதற்கு தடை ஒன்றுமில்லை.

கேள்வி: மூன்று நான்கு வாரங்கள் சேர்ந்தார்போல் ரேஷனை வாங்காவிட்டால் அதை அதிகாரிகளுக்கு தெரிவிக்க வேண்டுமா?

பதில்: நான்கு வாரங்களுக்கு குறையாமல் குடும்பத்துடன் ரேஷன் அமுலில் இருக்கும் இடங்களைவிட்டு வெளியே போகின்றவர்கள் அப்படிப்போய் ஒருவாரத்திற்குள் ரேஷன் கார்டை ரேஷனிங் ஆபீசரிடம் திருப்பிக் கொடுத்துவிடவேண்டும்.

கேள்வி: (L 1551 - மொய்தீன் குட்டி, சென்னை) காய், கறி, முட்டை, மீன் இவைகளுக்கு விற்பனைவரி உண்டா?

பதில்: உண்டு. இவைகளில் ஒருவருடத்தில் மொத்த வியாபாரம் ரூ. 10,000க்கு குறையாமல் செய்பவர் விற்பனைவரி கொடுக்கவேண்டும்.

கேள்வி: (L 1554 - சுப்பிரமணியம்) தம்பதிகள் விவாகமாகி சில காலத்திற்குள் (சுமார் 3 வருடம்) மனைவிக்கு கெட்ட ரத்தத்தினால் நீர்வியாதி உண்டாகி அதனால் பெருவியாதி ஆரம்பக் குறிகள் தென்படுகின்றன. குடும்ப வாழ்க்கைக்கு லாயக்கில்லாதிருக்கும்போது ஷை மனைவி சம்மதித்து புருஷனை வேறு கல்யாணம் செய்து கொள்ளுவதற்கு அனுமதி கொடுத்திருந்தால் புருஷன் வேறு கல்யாணம் செய்து கொள்ளலாமா? இதற்கு வழி என்ன?

பதில்: வேறு கல்யாணம் செய்து கொள்ள முடியாது. விவாகத்தை (முடியுமானால்) கோர்ட்டு மூலம் ரத்துசெய்து கொண்டு பிறகு வேறுகல்யாணம் செய்து கொள்வதுதான் வழி.

கேள்வி: (L 1596 - சதாசிவம்-திருத்துரைப்பூண்டி) விற்பனைவரி அதிகாரிகளால் குறிப்பிடும் காலத்திற்குள் ஜாடா விற்பனை வரியும் கட்டத் தவறினால் என்ன செய்வார்கள்?

பதில்: "பிராசிகூஷன்" அல்லது "கம்பவுண்டிங்" செய்வார்கள்.

கேள்வி: (L 1615) விவாகத்தை ரத்து செய்ய என்ன என்ன காரணங்கள் இருக்க வேண்டும்?

பதில்: 1949 மே மாத "வக்கீல்" பத்திரிகை பக்கம் 11-ல் காரணங்கள் விபரமாய் சொல்லப்பட்டிருக்கின்றன.

கேள்வி: (L 1616 வீரப்பச்செட்டியார் காரைக்குடி) ஒரு எண்ணைச் செக்கு வைத்திருப்பவருக்கு விற்பனை வரி கிடையாதென்று "வக்கீல்" மே இதழில் இருப்பது மின்சார சக்தியால் ஓட்டப்படும் எண்ணை செக்குக்குப் பொருந்துமா?

பதில்: இந்த வரி விலக்கு ஒரே ஒரு நாட்டுச் செக்கு வைத்திருப்பவருக்கு மட்டில்தான்; மின்சாரத்தால் ஓடும் செக்குக்கு பொருந்தாது.

கேள்வி (L 1650 முத்துசாமி, தென்காசி) சென்னை விவசாயிகள் கடன் நிவாரணத் திருத்தச் சட்டம் (1948-ம் வருடத்திய 24-வது ஆக்ட்) 30—9—1937-க்குப் பின்னல் ஏற்பட்டிருக்கும் ஒத்திகளை பாதிக்குமா?

பதில்: பாதிக்கும்.

கேள்வி: விவசாயிகள் நிவாரணச் சட்டம் செக்ஷன் 9 A (6) படி 30 வருடம் கழியவில்லையானல் (அதே நிலங்களை குத்தகைக்கு வைத்துக் கொண்டிருக்கும் கடனாளி) கொடுக்க வேண்டிய வட்டி மட்டிலும் கொடுத்தால் போதுமென்று கண்டிருக்கின்றது. அப்படி வட்டி கேட்கிற காலத்தில் அசலில் வீதாசாரக்குறைவு ஏற்படுமா?

பதில்: திருத்தச்சட்டத்தின் (செக்ஷன் 9 A 6 (a) ன் வாசகம் முந்திய ஷரத்துக்களுக்கு முறண்பாடாக இருக்கின்றது. இப்போது இருக்கும் வாசகப்படி ஒத்தி ஏற்பட்டு 30 வருடமாகாமல் கடன் வாங்கியவரே ஒத்திச் சொத்தை குத்தகைக்கு வைத்துக் கொண்டிருந்தால் அசலில் வீதாசாரக்குறைவு ஏற்படாதென்றே தோன்றுகிறது. (ஏனென்றல் இச்சந்தர்ப்பத்தில் அசல் தொகை 8, 9 செக்ஷன்களின்படி கணக்குச் செய்யப்படுமென்று கண்டிருக்கின்றது.)

கேள்வி: (L 1651-ராமசாமி, போளூராச்சி) கைத்தறி ஜவுளி உற்பத்தி செய்யும் ஒருவர் மொத்த வியாபாரமும் செய்தால் அவர் பில் புத்தகங்களும் கணக்குகளும் எவ்விதம் வைக்க வேண்டும்?

பதில்: விற்பனை வரிச் சட்ட சம்பந்தமாய்த்தானே கேட்டிருக்கிறீர்கள்? அப்படியானல், மொத்த வியாபாரத்திற்கு தனிக்கணக்கு வைத்துக் கொண்டிருந்து, லைசென்சும் பெற்றிருந்தால் மொத்த வியாபார விற்பனைக்கு மட்டில் விற்பனை வரி கிடையாது. சில்லரை வியாபாரத்திற்கு விற்பனை வரி கொடுக்க வேண்டும்.

கேள்வி: (ஷை) ஓர் கைத்தறி ஜவுளி வியாபாரி (வேறு ஒரு) ரிஜிஸ்டர் செய்து கொள்ளாமலும் லைசென்சு வாங்காமலுமுள்ள (அதாவது அவருடைய வருட விற்பனை ரூ. 7500-க்கும் குறைவு) வியாபாரிக்கு விற்பது மொத்த வியாபாரமா அல்லது சில்லரை வியாபாரமா?

பதில்: எதாக இருந்தாலும் இதற்கு விற்பனை வரி கிடையாது. ஆனல் அதற்காக விற்கும் வியாபாரி லைசென்சு பெற்றிருக்க வேண்டும்; தனிக்கணக்கும் வைத்திருக்க வேண்டும். ஏனென்றல் கைத்தறி ஜவுளி வியாபாரி மொத்த வியாபாரிக்கு விற்றாலும் சில்லரை வியாபாரிக்கு விற்றாலும் ஒரே சட்டம்தான்; வரி கிடையாது. நேரடியாக ஜவுளியை உபயோகப்படுத்துபவருக்கு (கன்ஸ்யூமருக்கு) விற்றால், அதாவது அவரே நேரடியாக சில்லரை வியாபாரம் செய்தால் அதற்கு விற்பனை வரி உண்டு.

Printed by DR. V. R. MURTY at the Homoeopathy Press, Banadurai, Kumbakonam.
Edited and Published by V. R. RAJAGOPALAN at No. 48, Kalyanaraman Street, Kumbakonam.

தமிழ்நாடு அரசு சுவடிக் காப்பக நூலகம்
187690
சென்னை-600 008

கல்யாண ஸீஸனுக்கென்றே புதுப்புது டிஸைன்

பெங்களூர், காஞ்சீவரம், கும்பகோணம்

பட்டுச் சேலைகள்

ஏராளமாக ஸ்டாக் செய்திருக்கிறோம். தேவைக்கு உடனே முந்துங்கள்.

ரெங்கமூர்த்தி கம்பெனி

கெருடலாயத் தெரு, :: கும்பகோணம்.

பிராஞ்சுகள் :—மெ. மெ. வீதி, காரைக்குடி & நாட்டரசன்கோட்டை.

சாயத்திற்கு உத்திரவாதமுள்ள
அற்புத கலர்களில் கவர்ச்சி செய்யும் பார்டர்கள்
முந்திகள் அமைந்த எமது சொந்த கை நெசவு
ஜரிகை பட்டு & நூல் சேலைகள்

வேண்டியவற்றிற்கு ஆர்டர் கொடுங்கள்.

பிரிட்டிஷ் எம்பயர் எக்ஸிபிஷனில் மெடல் சர்டிபிகேட் பெற்ற

ராணி ரெங்கய்யர் ஸன்ஸ்

பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள்

கெருடலாயத் தெரு — கும்பகோணம்

கிளை : 20, லெக்ஷிமிபுரம் 2-வது தெரு, மதுரை.

Regd. No. M. 5399

V. S. & Sons

SWEETS

குணத்திலும்
மணத்திலும்
நிகரற்றது

வி. எஸ். & ஸன்ஸ்

பெப்பர்மெண்டுகள்

தயாரிப்பவர்கள்:

தென் இந்திய பெப்பர்மெண்டு தொழிற்சாலை

கும்பகோணம்

(Estd. 1925)

ஹோமியோபதி பிரஸ், கும்பகோணம்.